Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி- 06 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 14 (22.07.2005) வெள்ளிக்கிழமை இதழ்:295



அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

## அக்கரைப்பற்று கிரனேட் வீச்சு; மூன்று பொலிஸார் காயம்!

### பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல்

அம்பாறை —

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் இனந்தெரியாதோரால் நேற்று நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இரண்டு விசேட அதிரடிப்படையினரும், ஒரு பொலிஸ் கொன்ஸ்டபிளும் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அக்கரைப்பற்று நகரிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவிலுள்ள சாகாமம் வீதியில் - இராமகிருஷ்ணமிசன் பாடசாலைக்கு அருகிலுள்ள தர்மசங்கரி விளையாட்டு மைதானததில் அமைந்துள்ள சுனாமி அகதிகள் முகாமுக்கு காவல் நின்ற படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரண்டுபேர் அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் மீது கிரனேட்டை வீசிவிட்டுத் தப்பிச்சென்றதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஆனந்த (வயது 30), பதிராஜ (வயது 34) மற்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அலுவலகங்கள் தாக்கப்பட்டன

அம்பாறை —

அம்பாறை - அக்கரைப்பற்றில் விசேட அதிரடிப்படையினர் மீது நேற்று கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து - அந்தப் பகுதியில் உள்ள புலிகளின் அரசியற்துறை அலுவலகங்கள் இரண்டு, அதிரடிப்படையினரால் சேதமாக்கப்பட்டன.

மேற்படி அலுவலகங்களுக்குள் நுழைந்து தேடுதல் நடத்திய அதிரடிப் படையினர் அங்கிருந்த தளபாடங்களையும் சேதப்படுத்தினர்.

இதுகுறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்திருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

## அக்கரைப்பற்று தாக்குதலுக்கு சீறும் படையணி பொறுப்பேற்பு!

அம்பாறை —

அக்கரைப்பற்று - தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் காவலில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது நேற்று நண்பகல் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அம்பாறை மாவட்ட சீறும் படையணி என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரும் துண்டுப்பிரசுரங்கள் நேற்று மாலை அக்கரைப்பற்று பிரதேசத்தில் விநியோகிக்கப்பட்டன.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் போராளிகள் மற்றும் பொதுமக்கள் படுகொலை செய்யப்படும் சம்பவங்களையும் - நேற்றுமுன்திம் இரவு கல்முனையில் கிராம அலுவலர் மாரிமுத்து பாஸ்கரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையும் இந்தத் துண்டுப்பிரசுரம் கண்டித்துள்ளது.

இத்தகைய கைங்கரியங்களில் ஈடுபடும் அரசபடைகளுடன் இணைந்திருக்கும் நாசகார கும்பல்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கும் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் -

இவ்வாறான நடவடிக்கைகள் தொடருமானால் அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என்றும் அந்தத் துண்டுபிரசுரத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள்

# தமிழ்மக்களின் நெருக்கடிகள் குறித்து வெளிநாட்டு தூதுவர்களுக்கு விளக்கம்!

கொழும்பு —

தற்போதைய அரசியல் நிலை குறித்தும் - பொதுக்கட்டமைப்பு உடன்பாடு உயர்நீதிமன்றத் தீர்ப்பால் முடக்கப்பட்டிருக்கும் சூழல் குறித்தும்-

இதனால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாகவும், வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து விளக்கமளிக்கும் நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழு ஆரம்பித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக - ஜேர்மனி, சுவிற்சர்லாந்து நாடுகளின் தூதுவர்களை கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழுவினர் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் -

ஜேர்மன் நாட்டுத் தூதுவரையும், சுவிற்சர்லாந்து நாட்டுத் தூதுவரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிவிவகாரக் குழு நேற்று முன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடியது.

சர்வதேச சமூகம்தான் இந்தச் சுனாமி பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த காரணமாக இருந்தது. இது அவர்களுடைய குழந்தையாகும்.

இந்தச் சுனாமி கட்டமைப்புக்கு தற்போது ஏற்பட்டிருக்கின்ற நிலைப்பாட்டை அவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளோம். கடந்த மூன்று ஆண்டுகள் நான்கு மாதங்களாக ஒரு யுத்த (12 ஆம் பக்கம் பார்க்க)



## லண்டனை கலக்கிய குண்டுகள்!

லண்டன் —

... நான்கு இடங்களில் நேற்று சிறிய





# லண்டனை கலக்கிய குண்டுகள்!

லண்டன் —

லண்டன் நகரில் மூன்று சுரங்க ரயில்களிலும், பஸ் ஒன்றிலுமாக நான்கு இடங்களில் நேற்று சிறிய குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றன. இதனால், லண்டனில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்றுக்காலை 11.38 மணியளவில் முதலாவது குண்டுவெடிப்புச் சம்பவம் சுரங்க ரயிலில் இடம் பெற்றது. இதைத் தொடர்ந்து குறுகிய நேரத்துக்குள் அடுத்தடுத்து மேலும் இரண்டு சுரங்க ரயில்களில் குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்தன.

பஸ் ஒன்றின் மேற்தட்டில் சிறிய குண்டொன்று வெடித்ததால், அதன் ஜன்னல்கள் மட்டும் சேதமடைந் தன. இந்தச் சம்பவங்களில் ஒருவர் காய மடைந்தார்.

லண்டன் நகரின் மத்தியிலுள்ள பல்கலைக்கழக மருத்துவமனையிலும் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டதை அடுத்து பொலிஸார் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத் தினர்.

இதேவேளை - இந்தச் சம்பவங்களை அடுத்து லண்டன் நகரில் சந்தேகநபர்கள் இருவரை பொலி ஸார் கைதுசெய்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# விசர்நாய்க்கடி உயிரிழப்பில் யாழ்.மாவட்டம் முதலிடத்தில்!

கொழும்பு —

இலங்கையில் கடந்த ஆண்டில் 69 பேர் விசர்நாய்க்கடி நோயினால் இறந்ததாகவும், யாழ். மாவட்டத்தி லேயே அதிகமாக 14 பேர் உயிரிழந் துள்ளதாகவும் சுகாதாரத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் நீர்வெறுப்பு நோயினால் 98 பேர் உயிரிழந்தனர். இவர்களில் - 69 பேர் நாய்க்கடிக்குள் ளாகியும், இருவர் பூனைக் கடிக்குள்ளாகி யும் இந்த நோய்க்கு இலக்காகினர்.

யாழ்.மாவட்டத்தில் 14 பேரும் , கொழும்பில் 9 பேரும், கம்பஹாவில் 6 பேரும், களுத்துறையில் 12 பேரும், மாத்தறையில் 8 பேரும், திருகோண மலையில் 6 பேரும் இந்த நோய்க் குள்ளாகி மரணமாகியுள்ளனர்.

தினமும் நாயினால் கடியுண்ட இரண்டாயிரம் பேர் வைத்தியசாலை களில் சிகிச்சை பெற்று வருவதாகவும் ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது.

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் விசர் நாய்க்கடி நோயினால் உயிரிழப் போர் தொகை அதிகம் என்றும் - இந்த நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கல்முனை கிரனேட் வீச்சில் மூவர் காயம்!

அம்பாறை —

அம்பாறை - கல்முனை பிரிவில் பாண்டிருப்பு பொலிஸ் சோதனைச் சாவடி மீது நேற்றிரவு 7.45 மணியள வில் கைக்குண்டுத் தாக்குல் நடத்தப் பட்டது.

இந்தக் குண்டுத் தாக்குதலில் ஊர் காவற்படைச் சிப்பாய் ஒருவரும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் இருவரும் காயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (01)

## புலனாய்வு அதிகாரி முத்தலிப் படுகொலை:

# 7 சந்தேகநபர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு —

இராணுவத்தின் முதலாவது புல னாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி லெப்.கேணல் முத்தலிப் கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஏழு பேரையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு ஹொரண நீதிபதி சோமசிங்க உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் நடந்த நீதிமன்ற அமர்வின்போது சந்தேக நபர்களான ஏழு பேரும் கடும் பாதுகாப்பின் மத்தி யில் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப் பட்டனர். கோப்பாயைச் சேர்ந்த ராஜன் (ஆறுமுகம் செந்தில்குமார்), இரத் மலானை புதிய விமானத்தள வீதியைச் சேர்ந்த அனுர தேசப்பிரிய, இராஜரட் ணம் சரஸ்வதி (உமா), முகமட் அன் சார் முகமட் அஸ்லம், தேவன் சரோஜா மற்றும் முதியான் சிலாகே ஆகியோ

(12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# திருமகள் சனசமூகநிலைய 53 ஆவது ஆண்டு விழா!

அரியாலை

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டிகளும் நாளை அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை நிகழ்வாக யாழ்.மாவட்டரீதியிலான மரதன் ஓட்டப் போட்டியும், பகல் நிகழ்வுகளாக நிலைய உபதலைவர் கே.கனக சபாபதி தலைமையில் விளையாட்டுப் போட்டிகளும்,

இரவு நிகழ்வுகளாக நிலையத் தலைவர் வி.கே.சண்முக லிங்கம் தலைமையில் பொதுக் கூட்டம், பரிசளிப்பு, கவியரங்கம், நாடகம், இசை நிகழ்வு என்பனவும் இடம்பெறவுள்ளன.

பகல் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜே/95 கிராம அலுவலர் எம்.மகேந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளனும், கௌரவ விருந்தினராக திருமகள் நாடக மன்ற ஸ்தாபக உறுப்பினரான த.யோகராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரவு நிகழ்வில் பிரதம விருந்தினராக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத் தலைவர் ஏ.தேவராஜாவும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.செழியனும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைகழக துணைவேந்தர் கலாநிதி எஸ்.மோகனதாஸ்ஸும் கலந்து கொள்ளவுள்ளனர். (54 55)

## வருடாந்த மஹோற்சவம்

தென்மராட்சி

சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இதன் தொடராக எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 25 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் இரவு 8 மணிக்கு ஆசிரியர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் விசேட சொற்பொழிவு நிகழ்த்துவார். (24)

## யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்

நிலத்தடி நீர் பாதுகாப்புத் திட்டம், திண்மக் கழிவுகள் முகாமைத்துவம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட நிலத்தடி நீர் பாதுகாப்பு, திண்மக் கழிவுகள் முகாமைத்துவம் சம்பந்தமாக விரிவாகக் கலந்துரையாடப் படவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் நகர அபிவிருத்திக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (55)

## முத்துமாரி அம்மன் கோவில் வீதி புனரமைப்பு

தென்மராட்சி

மட்டுவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவில் வீதியில் இருந்து - முதலியாவெளி வயல் வரை செல்லும் சுமார் 400 மீற்றர் நீளமான விவசாய வீதி, தற்போது தனிப்பட்ட ஒருவரால் திருத்தப்பட்டு வருகின்றது.

கோடை காலத்தில் வீதியாகவும், மாரிகாலத்தில் வாய்க்காலாகவும் இது பயன்படுத்தப்பட்டுவந்தது. இதனால் இந்த வீதியால் செல்வோர் மாரிகாலத்தில் போக்குவரத்து செய்வதில் பாரிய இடர்பாடுகளுக்குள்ளாகி வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு மேற்படி வீதி கட்டட இடிபாடுகளைக் கொண்டு உயரமாகவும், தண்ணீர் வழிந்தோட கரையோரமாக வாய்க்காலும் அமைத்து செப்பனிடப்பட்டு வருகின்றது. (24)

## தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை

வல்வெட்டித்துறை

22 வயது மதிக்கத்தக்க சித்த சுவாதீனமற்ற இளைஞர் ஒருவர் நேற்று பஸ்ஸில் வந்து இறங்கிய போது மயக்கமடைந்து - வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த ஆனந்தன் மயூரன் என்ற இந்த இளைஞர் சித்த சுவாதினமற்ற நிலையில் இருப்பதாகவும், இவரது பெற்றோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரி டொக்டர் மயிலேறும் பெருமாள் கேட்டுள்ளார்.

## மாகாண மட்ட தமிழ் தினப்போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்

மாகாணமட்ட தமிழ்த் தினப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம், 31 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருந்த மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டி ஓகஸ்ட் மாதம் நடைபெறும். இந்தப் போட்டி நடைபெறும் இடமும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

எனவே யாழ்.மாவட்டத்திலிருந்து மாகாணமட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட போட்டியாளர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## குருநகர் யாகப்பர் ஆலய திருவிழா ஆரம்பம்

குருநகர்

குருநகர் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தினமும் மாலை 6 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பித்து வழிபாடு, ஆராதனை, பிரசங்கம், திருப்பலி, ஆசீர் வழங்கல் ஆகியன இடம்பெற்று வருகின்றன.

ஆலயத் திருவிழாவை பங்குத்தந்தை ஆர்.எச்.சகாய நாயகம் அடிகள் நடத்திவருகிறார். அருளுரைகளை இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள அருட்பணியாளர் மைக்கல் மரியதாஸ் அடிகள் வழங்கி வருகிறார்.

நாளை மறுதினம் மாலை 5.15 மணிக்கு நற்கருணை ஆராதனை தொடங்கி சொரூப சுற்றுப் பிரகாம், ஆசீர்வழங்கல் ஆகியன நடைபெறும்.

25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் வணபிதா தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி நடைபெறும்.

மாலை 6 மணிக்கு திருச்சொரூப பவனி செபமாலையுடன் ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு சொரூப ஆசீர் வழங்கலுடன் திருவிழாக் கொண்டாட்டங்கள் நிறைவடையும் (206)


நிரஞ்சனாஸ் சங்கானை
முரளி, நாசர், பிரதிஉஷா நடித்த
மனுநீதி
சந்திரமுகி
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
இன்று முதல்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த
பிரியசகி
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா

விக்ராந்,
லக்ஷ்மிராய்
நடித்த
கற்க கசடற
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

அக்சன் கிங்
அர்ஜுன்,
சிநேகா நடித்த
சின்னா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
ஷாம் லைலா நடித்த
உள்ளம் கேட்குமே
29 முதல் – இந்தியாவிலும் இலங்கையில்
ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி நடித்த
தாஸ்
காட்சிகள்:– 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

சிறு விளம்பரம்

ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P- 0779122836
நேரம்:காலை9.00 - 8.30 வரை.(1198)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாகாணமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்று, தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ள –

புங்குடுதீவு மகாவித்தியாலய
மாணவர்களையும், அவர்களைப் பயிற்றுவித்த
அதிபர் தர்மகுணசிங்கம், ஆசிரியர் சுதர்சன்,
அவர்களையும்

புங்குடுதீவு மக்கள் சார்பாகவும் வர்த்தகர்கள் சார்பாகவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வர்த்தகர் சங்கம்,
புங்குடுதீவு.

[C/3301]

நமது ஈழநாடு
தமிழ் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நடாத்தும் 2005 ஆம் ஆண்டு தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென இலங்கையிலுள்ள முன்னனி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும்

இலவச முன்னோடிக் கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்துக்கான அனுசரணை வழங்குவோர்

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்


செலிங்கோ லைஃப்
சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது செலிங்கோ
சுன்னாகக் கிளை

DSI
சுப்ப சூஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

BOC
ரண் கெகுழு
சிறுவர் சேமிப்புக் கணக்கை
மண்டபத்தில் ஆரம்பிக்கலாம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்

யாழ். மாவட்டத்தில்

காலம் : 30.07.2005 (சனிக்கிழமை)
நேரம் :காலை 9.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை
இடம் : யாழ்.வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான அனுசரணை

மீண்டும் புதுப்பொலிவுடன்... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...

குமரகுரு
புடவை அழகுப்பொருள் வாணியம்
யாழ்.சாலை, கிளிநொச்சி.
Tel : 021 - 228 5971


கிளி. மாவட்டத்தில்

காலம் : 31.07.2005 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணிதொடக்கம் 3.00 மணிவரை
இடம் : கிளி.மத்திய கல்லூரி, பரந்தன் மகா வித்தியாலயம்.

போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
இங்கே வெட்டவும்


## விண்ணப்பப் படிவம்

பெயர் :- ....................................................

தற்போதைய முகவரி:- ....................................................

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :- ....................................................

மாவட்டம் :- ....................................................

| அலுவலக பாவனைக்கு | |
|---|---|
| இலக்கம் | |
| மாவட்டம் | |

.................................................... ..............................

பெற்றோர்/பாதுகாவலர்/ஆசிரியர்கையொப்பம் மாணவர் கையொப்பம்

# பிரதமர் மீது நடவடிக்கை எடுக்குமாறு குற்றத் தடுப்பு பிரிவிடம் மனு கையளிப்பு!



கொழும்பு—

சுனாமி நிவாரண நிதி மோசடி தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி குற்றத் தடுப்பு திணைக்களத்திடம் ஐக்கிய தேசியக்கட்சி மனு ஒன்றைக் கையளித்துள்ளது.

ஐ.தே.க சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசீம் இந்த மனுவைக் கையளித்துள்ளார்.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கேல் பெரேரா, காமினி லொக்குகே, மகிந்த விஜயசேகர மற்றும் பி.தயாரத்ன ஆகியோரும் இந்தமனு கையளிப்பில் கலந்துகொண்டனர்.

இந்த மனுவில் சுனாமி நிவாரண நிதி மோசடி தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ, அவரது செயலாளர் லலித் வீரதுங்க, பிரதமர் அலுவலகக் கணக்காளர் சுப்சிங்க ஆகியோர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுனாமி நிவாரண நிதியான 82.9 மில்லியன் ரூபாவை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த வைப்புக் கணக்குக்கு மாற்றியுள்ளது தொடர்பான விபரங்களும் இந்த மனுவில் கையளிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய மகிந்த ராஜபக்ஷ - தமது ராஜபக்ஷ வம்சத்தினர் ஊழல் பேர்வழிகள் அல்ல என்றும், முடிந்தால் எம்மீது புகார் மனு கையளியுங்கள் என்றும் சவால் விட்டிருந்தார்.

அந்தச் சவாலை எதிர்கொள்ளும் வகையிலேயே ஐ.தே.கவினர் இந்தப் புகார் மனுவைக் கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தஆண்டில் ஜனாதிபதித் தேர்தல்; சர்வதேச அமைப்பு கோரிக்கை!

கொழும்பு—

இலங்கையில் இந்தவருடம் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டுமென சர்வதேச ஜனநாயகவாதிகளின் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் தலைமையில் வொஷிங்ரன் நகரில் கூடிய இந்தச் சங்கத்தின் அரச தலைவர்களின் ஒன்பதாவது மாநாட்டிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மூன்று பிரதமர்கள் உட்பட 26 நாடுகளின் அரசதலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இந்தத் தீர்மானத்திற்கு அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், அமெரிக்க குடியரசுக்கட்சித் தலைவர் கென்முல்லர் உட்பட சங்கத்தின் பிரதிநிதிகள் தமது ஆதரவைத் தெரிவித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் பிரதிநிதிகளுடன் மட்டக்களப்பில் சந்திப்பு!





மட்டக்களப்பு—

முஸ்லிம் பள்ளிவாசல் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நண்பகல் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் காணி, குடியிருப்புகள் சம்பந்தமான விடயங்கள்ஆராயப்பட்டன. இதன் அடிப்படையில் காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேசங்களுக்கு தனித்தனி குழுக்களை அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதில் பள்ளிவாசல் சம்மேளனத்தின் சார்பில் மூன்று பிரதிநிதிகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளும் பங்கேற்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் மற்றும் கலாசார பண்பாட்டுக்குழுத் தலைவர் அரியதாஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

# இந்தவருடத்தில் ஜனாதிபதி தேர்தல்; ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை!



கொழும்பு—

ஜனாதிபதியின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவடைவதால், இந்தவருடம் முடிவதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

பிலியந்தலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

இந்தவருடம் முடிவதற்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், ஊடகங்களில் அடுத்த வருடமே ஜனாதிபதி தேர்தலென செய்திகள் வெளியாகின. இது சட்டத்துக்கு முரணான ஒரு செயற்பாடாகும். இந்த நாட்டுடனும், மக்களுடனும் சட்டத்துடனும் எவரும் விளையாடக்கூடாது. எனவே, இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டுமென நாம் தெரிவிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு—

வடக்கு -கிழக்கு சிங்கள அமைப்பு நாளை கொழும்பு கோட்டை அரசமரச் சந்திக்கு அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

1983 ஆம் ஆண்டு ஆடி 23 ஆம் திகதி திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டமையைக் கண்டித்தும், தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க வடக்கு - கிழக்கில் இருந்து படை உயரதிகாரிகளை இடமாற்றுவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டுமென வலியுறுத்தியுமே இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியிடம் கோரிக்கை மனு ஒன்றைக் கையளிக்கவும் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு தீர்மானித்துள்ளது.

## முத்தலிப் கொலை தொடர்பாக

# சுயாதீன விசாரணை நடத்தும் பொறுப்பை அரசு ஏற்கிறதாம்

கொழும்பு—

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி லெப். கேணல் முத்தலிப்பின் படுகொலை தொடர்பாக சுயாதீனமான விசாரணை நடத்துவதற்கான பொறுப்பை தாம் ஏற்றுக்கொள்வதாக, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

முத்தலிப் படுகொலை தொடர்பாக இதுவரை நடைபெற்ற விசாரணைகள் குறித்த தகவல்கள் எதனையும் வெளியிடமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.



இதேவேளை இந்தக் கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சஞ்சீவ என்ற சந்தேகநபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.ஆர்.மித்திரிபால நாடாளுமன்றில் தனது ஆலோசனையைச் சமர்ப்பித்தார்.

முத்தலிப் கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சஞ்சீவ என்ற நபர் ஐ.தே.கட்சியின் ஊடகப் பிரிவுடன் தொடர்புடையவரென பிரதியமைச்சர் றோகித அபயகுணவர்த்தன தெரிவித்தார்.

இந்த சந்தேக நபருக்கு அரச தகவல் திணைக்களமே அடையாள அட்டையை வழங்கியதாக ராஜித சேனாரட்ண தெரிவித்தார். அடையாள அட்டை மங்கள சமரவீர ஊடகத்துறை அமைச்சராக இருந்தபோது வழங்கப்பட்டதாகவும் அவர் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாணத்திலிருந்த

# அரசியல் அலுவலகங்களை புலிகள் அகற்றியது போருக்கு ஆயத்தமாகவே!

## விமல் வீரவன்ச கூறுகிறார்



கொழும்பு—

கிழக்கு மாகாணத்திலுள்ள அரசியல் அலுவலகங்களை விடுதலைப்புலிகள் அகற்றியமையானது - போரொன்றுக்கு அவர்கள் ஆயத்தமாவதையே எடுத்துக்காட்டுவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

நுகேகொடவில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவர் விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

அவ்வாறு மீண்டுமொரு போர் ஏற்படுமாயின் அதனை நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால்தான் முடியும். எனவே அவரை அடுத்த ஜனாதிபதியாக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி விஷமப் பிரசாரங்களை நடத்திவருகிறது.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எல்லாவற்றையும் அரசியல் லாபநோக்கத்துக்காகப் பயன்படுத்திவருகிறது.

அத்துடன், பொதுக்கட்டமைப்பின் 4 சரத்துகளுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளமையானது எமக்குக் கிடைத்த வெற்றி. எனினும் -

பொறுப்புள்ள அரசாங்கம் நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டதெனவும் விமல் வீரவன்ச மேலும் கூறினார்.

## சுனாமி நிதியுதவி; விரைவில் அறிக்கை

கொழும்பு—

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கிடைத்த நிதி தொடர்பாக முழுமையான அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்க கணக்காய்வு நாயகம் உறுதியளித்துள்ளார். இந்த அறிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொதுக் கணக்குக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத்தில் இடம்பெற்ற கணக்காய்வு தொடர்பான கூட்டத்தில் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபால அமரசிங்க தெரிவித்தார்.

## புத்தளத்தில்

# மினிபஸ்ஸில் இருந்து வெடிபொருட்கள் மீட்பு!

புத்தளம்—



புத்தளத்தில் தனியார் பஸ் ஒன்றில் இருந்து 40 மி.மீ.கிரனேட் லோஞ்சருக்கான குண்டு மற்றும் ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 40 என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

புத்தளம் எலுவன்குளம் மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் மினிபஸ் புத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தபோது - பொலிஸார் அதில் தேடுதல் நடத்தினர். இதன்போது 40. மி.மீ. கிரனேட் லோஞ்சருக்கான குண்டு மற்றும் ரி - 56 ரக துப்பாக்கி ரவைகள் 40 என்பன மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மினி பஸ்ஸின் சாரதி முருகையா ஜெயரட்ணம் (வயது 24), நடத்துநர் கணேஸ் ( வயது 23) ஆகியோர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

# ஹார்மிசனின் பந்துவீச்சில் அவுஸ்ரேலியா சுருண்டது!


லண்டன் —

இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமான வரலாற்று சிறப்புமிக்க

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஹார்மிசனின் அபார பந்து



ஆஷஸ் டெஸ்ட் தொடரில் முதல் இனிங்ஸில் அவுஸ்ரேலிய அணியை 190 ஓட்டங்களுக்குள் இங்கிலாந்து அணி சுருட்டியது.





வீச்சால் அவுஸ்ரேலிய வீரர்கள் பெரிதும் திணறினர்.

அணி 87 ஓட்டங்களை எடுப்பதற்குள்ளாகவே ஹைடன், பொன்டிங், மார்ட்டின், லாங்கர், கிளார்க் என ஐந்து முக்கிய விக்கெட்டுக்களை அவுஸ்ரேலிய அணி இழந்து தவித்தது.

பின்னர் கடிச் - கில் கிறிஸ்ட் ஜோடி களமிறங்கி நிதானமாக ஆடிக்கொண்டிருந்தது.

எனினும், ஸ்கோர் 126 ஆக இருந்தவேளை கில்கிறிஸ்ட்டும், 175 ஆக இருந்தவேளை வோனும், 178 ஆக இருந்த



போது கடிச் மற்றும் லீயும், ஸ்கோர் 190 ஆக இருந்த வேளை கிலெஸ்பியும் ஆட்டமிழந்தனர்.

அவுஸ்ரேலிய அணியில் அதிகபட்சமாக 40 ஓட்டங்களை லாங்கர் எடுத்தார். ஹைடன் 12, பொன்டிங் 9, மார்ட்டின் 2, கிளார்க் 11, கடிச் 27, கில்கிறிஸ்ட் 26, வோன் 28, லீ 3, கிலெஸ்பி 1 ஓட்டங்களையும், மக்ரா ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

அவுஸ்ரேலிய அணி 40.2 ஓவர்களிலேயே 190 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதில் 21 உதிரி ஓட்டங்களாகும்.

பந்துவீச்சில் ஹார்மிசன் 11 ஓவர்களில் 43 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், பிளின்ரொப் 2, ஜோன்ஸ் 2, ஹொகார்ட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தச் செய்தி எழுதப்பட்ட போது இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் ஆடிக்கொண்டிருந்தது.



பெங்களூரில் நேற்றுமுன்தினம் 2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக தேர்வுசெய்யப்பட்ட இந்திய அணி கப்டன் ராவிட்டுக்கு ஹூண்டாய் எலன்ட்ரா கார் பரிசளிக்கப்பட்டது.

## தென்கொரிய போட்டியில் புதுக்குடியிருப்பு மாணவன்

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் நிரஞ்சன், தென்கொரியாவில் இன்று ஆரம்பமாகும் சர்வதேச தடகள விளையாட்டு விழாவில் பங்கேற்கவுள்ளார்.

இவர் மாகாண மட்டப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டத்தில் 44.98 செக்கன்களில் ஓடி - தங்கப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காலிறுதி ஆட்டம்

பருத்தித்துறை —

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் - வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு சுடர் ஒளி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

## சின்சினாட்டி ரெனிஸ் போட்டி; சானியாவுக்கு முதல் வெற்றி!



சின்சினாட்டி —

சின்சினாட்டி ஓபன் ரெனிஸ் தொடரை சானியா மிர்சா வெற்றியுடன் தொடங்கினார். முதல் சுற்றில் இவர், உலக தர வரிசையில் 36 ஆவது இடத்தில் உள்ள அன்னலீனா குரோயன்பெல்டை வீழ்த்தினார்.

அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் வெஸ்டர்ன் அன்ட் சதர்ன் பினான்சியல் குரூப் ஓபன் ரெனிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

உலக தரவரிசையில் 70 ஆவது இடத்தில் உள்ள இந்திய வீராங்கனை சானியா மிர்சா முதல் சுற்றுப் போட்டியில் ஏழாம் நிலை வீராங்கனையான ஜெர்மனியின் அன்ன லீனா குரோயன்பெல்டை எதிர்த்து விளையாடினார்.

அபாரமாக ஆடிய சானியா முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் எளிதில் கைப்பற்றினார். இவரது வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாத குரோபன்பெல்ட் இரண்டாவது செட்டிலும் விரைவில் தோல்வியை ஒப்புக்கொண்டார். இறுதியில் சானியா 6-4, 6-3 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது சுற்றில் இவர் போர்டோரிகோவின் கிறிஸ்டியானா பிரான்டியை சந்திக்கவுள்ளார். முதல் சுற்றில் கிறிஸ்டியானா 6-3, 6-1 என்ற செட்களில் அமெரிக்காவின் ஜெசிகா கிர்கிலான்டை வென்றார்.

## 'ஆஷஸ் கிண்ணம்' பெயர் வந்தது ஏன்?

லண்டன் —

ஆஷஸ் கிண்ணம் - இந்தப் பெயருக்குப் பின்னால் ஒரு பெரிய கதையுள்ளது. மற்ற அணிகளைப் போலவே இங்கிலாந்தும், அவுஸ்ரேலியாவும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வந்தன. அப்போதெல்லாம் கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்துதான் வலிமைமிக்க அணியாகத் திகழ்ந்தது.

1882 இல் இந்த நிலைமை மாறியது. ஓவலில் நடந்த டெஸ்டில் பிரட் ஸ்போபெர்த் அபாரமாக பந்து வீசி 14 விக்கெட் வீழ்த்த, அவுஸ்திரேலியா அணி இங்கிலாந்தை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இங்கிலாந்து மண்ணில் அவுஸ்ரேலியா முதல் வெற்றி பெற்று வரலாறு படைத்தது.

இதை ஸ்போர்ட்டிங் டைம்ஸ் பத்திரிகை வித்தியாசமாக அஞ்சலி செய்தியாக வெளியிட்டது. ஓவல் அரங்கில் 1882 ஓகஸ்ட் 29 இல் இங்கிலாந்து அணி மறைந்து விட்டது. இதற்காக ரசிகர்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறார்கள்.

உடல் எரிக்கப்பட்டு அதன் சாம்பல் (ஆஷஸ்) அவுஸ்திரேலியாவுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்று ரெஜினால்ட் ஷெர்லி புருக்ஸ் என்பவர் கேலியாக அஞ்சலி எழுதி இருந்தார். இதுதான் ஆஷஸ் கிண்ணம் எனப் பெயர் வரக் காரணமாக அமைந்தது.

அடுத்த ஆஷஸ் தொடரில் லோர்ட் டான்லி தலைமையிலான இங்கிலாந்து அணி அவுஸ்ரேலியாவை 2-1 என்ற கணக்கில் வென்றது. உடனே மெல்பேர்ன் அரங்கிலிருந்த ரசிகைகள் பெயிலை எரித்து, அதன் சாம்பல் அடங்கிய நான்கு அங்குலக் குட்டிக்கோப்பையை டான்லிக்கு பரிசாக அளித்தனர். சிலர் எரிக்கப்பட்டது பந்து என்கின்றனர். இந்தச் சர்ச்சை இன்றும் நீடிக்கிறது.

1972 இல் டான்லி மறைந்த பிறகு அந்தக் கிண்ணம் மெல்பேர்ன் கிரிக்கெட் கிளப்புக்கு அளிக்கப்பட்டது. பின்னர் லோர்ட்ஸ் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது. எந்த அணி வென்றாலும் கிண்ணம் மட்டும் லோர்ட்ஸில் இருக்க, பிரச்சினை எழுந்தது.

இதற்கு முடிவு கட்ட 1998-99 இல் ஆஷஸ் மாதிரியில் புதிதாக கிரிஸ்டல் கோப்பை ஒன்று வடிவமைக்கப்பட்டது. இதனை முதல் முறையாக அவுஸ்ரேலிய கப்டன் மார்க் டெய்லர் பெற்றார். 1989 இல் இருந்து ஆஷஸ் கிண்ணம் அவுஸ்ரேலியா வசம்தான் இருக்கிறது. இங்கிலாந்து அணி கிண்ணம் வென்று 18 ஆண்டுகள் ஆகின்றன. இந்த அணி கடைசியாக 1986-87 இல் ஆஷஸ் தொடரை வென்றது.

# விளையாட்டு

## இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று; இலங்கை அணி வீரர்களுக்கு காய்ச்சல்

கொழும்பு —

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று கண்டியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் - இலங்கை அணியின் நான்கு வீரர்கள் புளூ காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ், மகேல ஜெயவர்த்தன, திலான் சமரவீர ஆகியோருக்கு காய்ச்சல் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. இதனால் நேற்று முன்தினம் இவர்கள் பயிற்சிக்கு செல்லவில்லை.

எனினும் இவர்களுக்கு கடுமையான பாதிப்பு இல்லை என்றும், நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அணித்தலைவர் அத்தப்பத்து நம்பிக்கை தெரிவித்தார்.

அதேவேளை - பந்துவீச்சு சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் மேற்கிந்திய வீரர் லோசன் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பங்கேற்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## யசிந்தனின் பந்துவீச்சில் யூனியன் அணி சுருண்டது!

யாழ்ப்பாணம் —

அஸ்ரா கிண்ணத்துக்கான யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெறும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் நடைபெற்ற ஆட்டமொன்றில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியை விக்ரோறியா கல்லூரி அணி வெற்றிகொண்டது.

முதலாவது இனிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய விக்ரோறியா கல்லூரி அணி 150 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தனுஷன், சஞ்சீபன், தயாகரன் ஆகியோர் முறையே 28,25,20 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜெயவாணன், றஜித்தன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், வக்கிரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. துஷ்யந்தன், சுதர்சன் ஆகியோர் தலா 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

யசிந்தன் தனது துல்லியமான பந்துவீச்சின் மூலம் 5 விக்கெட்டுக்களையும், சஞ்சீவன், கோவர்த்தனன் ஆகியோர் முறையே 3, 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய விக்ரோறியா கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது.

தயாளன், றஞ்சன் ஆகியோர் தலா 20 ஓட்டங்களையும், கரன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

மீண்டும் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தபோது ஆட்டம் முடிவுற்றது.

இந்த ஆட்டத்தில் புள்ளிகளின் அடிப்படையில் விக்ரோறியா கல்லூரி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

# சுனாமி நிவாரணப் பணிகளில் கொரிய தொண்டர் நிறுவனங்கள்



யாழ்ப்பாணம் —

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென, தமது நாட்டின் எட்டு நிறுவனங்கள் இலங்கையில் உதவிப் பணிகளை மேற்கொள்வதாக கொரிய அந்த நாட்டின் சர்வதேச ஒத்துழைப்பு ஏஜென்சியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி - கான் யுங்ரே தெரிவித்தார்.

கொரிய நாட்டின் நிதியுதவியுடன் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட, கட்டட நிர்மாணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு இவர் வந்திருந்தார். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்துகையில் -

யாழ்.தொழில்நுட்ப கல்லூரியில் கொரிய நாட்டு அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டட நிர்மாணப் பணிகள், அடுத்து இரு ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

தொழில்நுட்பக் கல்லூரியில் மேற்கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகளை மேற்பார்வையிடவென மூவர் அடங்கிய பேராசிரியர் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவினர் கட்டட வேலை உபகரணங்கள் தொடர்பான பயிற்சிகளையும் வழங்கவுள்ளனர். இதற்கென 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளோம்.

இந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் தொடர்பான வேலைத் திட்டங்களை இன்றிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம். உங்கள் அனைவரது ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தினுள் இவற்றை முடித்துவிடுவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இந்தத் தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி பயில்கின்றனர். அவர்களுக்கு உதவுவதும் எமது நோக்கமாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணிபுரியவென 8 கொரிய அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் 2 நிறுவனங்கள் இங்கு சேவையாற்றுகின்றன.

இவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்னெடுக்கவேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபடவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மீளக்குடியமரமுடியாத குடும்பங்களுக்கு ஜனபூமி திட்டத்தின்கீழ் காணிகள்!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களில், மீளக் குடியமரும் வாய்ப்பை இழந்த 800 குடும்பங்களுக்கு ஜனபூமி திட்டத்தின்கீழ் காணிகள் வழங்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின்கீழ் தொண்டமானாறு -அச்சுவேலி வீதியிலுள்ள அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் என்று, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

போர் அனர்த்தங்களால் குடியிருப்புகளை இழந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வடமராட்சி வடக்கில் தற்காலிக வீடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க உலக வங்கி முன்வந்த போதும் போதிய காணிகள் இருக்கவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அரச காணிகளைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# சொந்தக் காணியற்றோருக்கு காணி வழங்க நடவடிக்கை!

சண்டிலிப்பாய் —

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் சொந்தக் காணியற்ற வறிய குடும்பங்களுக்கு, காணி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, சொந்தக் காணியற்ற வறிய குடும்பங்கள் அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியுமென, சண்டிலிப்பாய் பகுதி காணி உத்தியோகத்தர் சி.சிவசுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள காணியற்றவர்களுக்கு காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், எமது பிரிவில் அரச காணிகள் இல்லாமையால், வேறு பிரிவுகளில் 2 பேர்ச் காணி வழங்கப்படவுள்ளது. இவ்வாறு வேறு பிரிவில் வதிய விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை உடனடியாகத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (44)

# விபத்தில் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம் —

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வாகனமும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில், சைக்கிளில் பயணம்செய்த வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு யாழ்.கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - இணுவிலைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (வயது 64) என்ற வயோதிபரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

கோயில் வீதி வழியாக யாழ். நகர் நோக்கி வந்துகொண்டிருந்த போதே கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு முன்னால் கண்காணிப்புக்குழு வாகனம் வயோதிபரை மோதிக் காயப்படுத்தியதாகத் தெரியவருகிறது.

# அனுமதி பெறப்படாமல் கட்டடங்கள் அமைப்பதை இடைநிறுத்துமாறு கோரிக்கை

பண்டத்தரிப்பு —

பண்டத்தரிப்பு பகுதியில் அனுமதியின்றிக் கட்டப்படும் கட்டடங்களின் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு அந்தப்பகுதி மக்கள், மானிப்பாய் பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

பண்டத்தரிப்புப் பகுதியில் சில கட்டடங்கள் அனுமதியின்றிக் கட்டப்படுகின்றன.

இதனால் வீதிப் போக்குவரத்துகள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், தேவையற்ற போக்குவரத்து நெருக்கடிகள், வீதியின் அகலக் குறைப்பு என பலவிதமான இடையூறுகள் ஏற்படுகின்றன.

எனவே, தங்களது அனுமதி பெறப்படாமல் கட்டப்படும் கட்டடங்களைக் கண்டுபிடித்து, அதனை உடனடியாக நிறுத்த ஆவன செய்யுமாறு அந்தப்பகுதி மக்கள், மானிப்பாய் பிரதேச சபையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (44)

# நிறுவுநர் தினமும் பெற்றோர்தின விழாவும்

யாழ்ப்பாணம் —

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும், பெற்றோர்தின விழாவும் இன்று பிற்பகல் 2.15 மணிக்கு கைலாய பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்-இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் என்.ஜெயரத்தினம் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற திட்டப் பணிப்பாளர் தே. தர்மராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் தின உரையை ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.வி.கணேசலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்!

சண்டிலிப்பாய் —

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் - இன்று காலை 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் வ.ரூபினி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்குபற்றுவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (44)

# மன்னார் மாவட்ட கமக்காரர் குழுவொன்று புலோலி கமநல நிலையத்துக்கு விஜயம்!

வடமராட்சி —

மன்னார் மாவட்ட கமக்கார அமைப்புகளின் 20 டேர் கொண்ட குழுவொன்று -கெயர் சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையுடன் புலோலி கமநல சேவை நிலையத்துக்கு அண்மையில் விஜயம்செய்தது.

இவர்களை தலைமைக் காரியாலய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.உருத்திரேஸ்வரன் வரவேற்று, அங்கு விவசாயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினார்.

மன்னார் கெயர் சர்வதேச உலர் வலய விவசாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், திட்ட அலுவலர் கே.ஜே.குரூஸ் மற்றும் திட்ட உதவியாளர் என்.தேவபொன்கலன் ஆகியோர் மன்னார் கமக்கார அமைப்புடன் வந்திருந்தனர்.

திட்ட அலுவலர் கே.ஜே. குரூஸ் கருத்துத் தெரிவிக்கையில் -

விவசாய அமைப்புகளின் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதும், அனுபவப் பகிர்வை ஏற்படுத்துவதும் அபிவிருத்தி அமைப்பைப் பலப்படுத்துவதுமே இந்தப் பயணத்தின் நோக்கம் எனத் தெரிவித்தார்.

இந்தக் குழு கெருடாவில் பகுதிக்கு விஜயம்செய்து, அங்குள்ள அமைப்புகளுடனும் கலந்துரையாடிச் சென்றது. (17)

# அலுவலகக் கிணற்றைப் பாவிக்கும் படையினரின் செயற்பாடு நிறுத்தம்

நெடுந்தீவு —

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை வளாகத்திலுள்ள கிணறுகளை -அலுவலக நேரத்தில் கடற்படையினர், பொலிஸார் பயன்படுத்துவது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அலுவலக நேரத்தில் இவற்றைப் பயன்படுத்துவதன்மூலம் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக, உதவி அரச அதிபர் பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகளை- சந்தித்து எடுத்துக் கூறியதையடுத்து, தற்போது இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை அலுவலக முன்வெளியில் கிரிக்கெட் விளையாடுவதையும் தற்போது கடற்படையினர் நிறுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

# வலுவூட்டல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம் —

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், CHA நிறுவனமும் இணைந்து நடத்தும் - 'சமாதானமும் அபிவிருத்தியும்' என்ற விடயம் தொடர்பான கிராம அலுவலர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிநெறி நேற்று ஆரம்பமாகியது.

இந்தப் பயிற்சிநெறி இன்றும் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

# நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுக்க பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன

வடமராட்சி —

வடமராட்சி பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை இழந்த மக்களுக்கு, பல நிறுவனங்கள் நிரந்தர வீடுகளைக்கட்டிக்கொடுப்பதற்கு முன்வந்துள்ளன.

இந்த வகையில் கியூமெடிக்கா, போரூட், யூ.என்.கபிற்றெட், கியூடெக் கரித்தாஸ் ஆகிய நிறுவனங்கள் - ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நிறுவனமாகப் பொறுப்பேற்று செயற்படுத்திவருகின்றன.

கற்கோவளத்தில் கியூமெடிக்கா நிறுவனமும், தும்பளை கிழக்கில் போரூட் நிறுவனமும், வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் கெயர் நிறுவனமும், பருத்தித்துறை கிழக்கில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனமும் இணைந்து 867 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (17)


## வாழ்க வளமுடன்








யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியால் அண்மையில் சுயதொழில் கடனுதவி - நடமாடும் சேவைமூலம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. நிகழ்வில் பயனாளி ஒருவருக்கு யாழ்.பிரதேச செயலர் கடன் வழங்குவதையும், அருகில் சமுர்த்தி முகாமையாளர் ம.கியூமன் மற்றும் வங்கி கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரையும் படத்தில் காண..லாம்.

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

(தொடரும்...)

'மனுசி ஊருக்குப் போட்டுது' நாலைஞ்சு நாளைக்கு வீட்டில அடுப்பு எரியாது என்பது அவர் கூறியது.

இவர்களது கூற்றுகள் எல்லாம் சமையல் என்பது பெண்களுக்கு மட்டுமே ஆனது என்ற கருத்தையே வலியுறுத்துவனவாய் காணப்படு கின்றன. போதாதற்கு சமையல் பொருட்களை அறிமுகப்படுத்தும் சில விளம்பரங்கள் கூட, பெண்களை மையப்படுத்தி அல்லது இலக்கு வைத்து செய்யப்படுகின்றன. பெண்களுக்கான சில பயிற்சிநெறிகளில் கூட கேக் ஐசிங் போன்றவை காணப்படுகின்றன.

பெரிய பெரிய உணவகங்களில் சமையல் கலையில் ஆண்கள் இருப்பதைப் பார்க்கமுடிகிறது. வீடுகளில் இடம்பெறும் பெரிய பெரிய வைபவங்களுக்கு ஆண் சமையல்காரர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

வெளிநாடொன்றிலிருந்து வருகை தந்த ஊடகவியலாளர் ஒருவர் - ஒரு முறை வெளிநாட்டில் தமிழ் குடும்பங்களின் வாழ்க்கை முறை பற்றி விலாவாரியாகக் குறிப்பிட்டார். பின்னர்

'பெண்கள் சமையலில் ஈடுபடுவது பற்றி என்ன சொல்கிறீர்கள்' என என்னிடம் கேட்டார்.

பெண்கள் சமையல் செய்வது பிழையல்ல ஆனால் - பெண் சமைப்பதற்கென்றே பிறப்பெடுத்தவள் என நினைப்பதைத் தான் ஏற்றுக் கொள்ள முடியாது' என்றேன்.

அப்போது அங்கே எங்களுடன் இருந்த சில இளைஞர்கள் (20 -25 வயதுடையோர்)

ஆண்களுக்கு வேற எவ்வளவு வேலை இருக்கும்? வீட்டிலயும் சமைக்க ஏலுமோ? சமையலையும் நாங்களே (ஆண்கள்) செய்தால் நீங்கள் (பெண்கள்) வேற என்ன செய்வியள்? என்று கத்தினார்.

அப்போது - அங்கே வந்திருந்த இன்னொரு பெண் - அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் 35வருடங்கள் சேவையாற்றி, ஓய்வு பெற்றவர் கூறினார்.

'உயர் பதவியில் நான் இருந்தனான். நான் பெரும்பாலான நேரம்- இரவுகளில் எங்களுடைய வேலைத் தளத்தில் நின்றிடுவன்... என்னுடைய கணவர்தான் சமைத்து பிள்ளைகளுக்கும் சாப்பாடு கொடுத்து ... எனக்கும் இரவுச் சாப்பாடு


ஆதிலட்சுமி சிவகுமார்

கொண்டு வந்து தருவார்... எங்கள் குடும்பவாழ்க்கையில் ஒருபோதும் நாங்கள் "ஈகோ" வுக்கு அடிமையாக வில்லை....' என்றார் அவர்.

இந்தப் பிரச்சினை எப்பொழுது ஈகோவாக உருவெடுக்கிறது என்றால்- 'எந்த வேலையும் குடும்பத்துக்குரியது என்று நினைக்காமல், ஆணுக்குரியது அல்லது பெண்ணுக்குரியது என நினைக்கும் போது' என்றார் அவர்.

இந்தச் சமையல் சுமை என்பது பல பெண்களைப் பொறுத்தவரை, மிகப் பெரும் சுமையாகக் காணப்படுகிறது. சமையலைக் காரணம் காட்டியே வெளி நிகழ்வுகளை தட்டிக் கழிக்கும் பெண்கள் உள்ளனர்.

முன்பொரு காலத்தில் திருமணத்துக்கு பெண்பார்க்கும் பொழுது பெண்ணிடம் நன்றாகச் சமைக்கத் தெரியுமா? என்று கேட்பார்களாம்.

உத்தியோகம் என்பது புருஷ லட்சணம் எனக்கருதப்பட்ட காலம் அது. அந்தக் காலத்தில்தான் பெண் அடுப்படி நாயகியாகக் கணிக்கப்பட்டாள். ஆனால் காலம் இப்போது மாறியிருக்கிறது. இந்த மாற்றம் எல் லோருமே வர வேற்கின்ற மாற் றம்.

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் (நண்பர்களாயிருந்தாலும் சரி, கணவன் மனைவியாயிருந்தாலும் சரி) அவரவர் ஆற்றல்களுடனும், ஆளுமைகளுடனும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்த உறவு புனிதமானதாகவும் கௌரவமானதாகவும் இருக்கும்.

இதேவேளை நண்பி ஒருவர் கூறினார் - தங்களுடைய வீட்டுக்கு வந்த உறவினர் ஒருவர் தங்கள் வீட்டில் சாப்பிட்டாராம். போகும் போது 'இந்த குழம்பு நல்ல ருசியாக இருந்தது. என்ர மனுசியை கூட்டிக் கொண்டுவாறன். எப்படிக் குழம்பு வைக்கிறதெண்டு சொல்லிக்குடுத்து விடுங்கோ' என்றாராம்.

இந்தக் கூற்றுகளும் இதுபோன்றவையான கூற்றுகளினதும் தோற்றுவாய் எமது சமூக அமைப்பிலேயே காணப்படுகிறது. அடிப்படை அமைப்பியல் இன்னமும் மாற்றமுறாமலேயே காணப்படுவதால், இத்தகைய வெளிப்பாடுகளை தவிர்க்க முடியாதுள்ளது. புறநிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் இந்த அடிப்படைகளில் மாற்றங்களை ஏற்படுத்தப்போவதில்லை. (தொடரும்...)



# சிநேகிதியே

## கர்ப்பகாலத்தில் ஏற்படும் மாற்றங்கள்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

**சிறுநீர் பிரச்சினை**

கர்ப்பகாலத்தில் கருப்பை அழுத்துவதாலும், அதன்தசை கீழிறங்கி வருவதாலும் சிறுநீரகமும், சிறுநீர்ப்பையும் அழுத்தப்பட்டு, எப்போதும் சிறுநீர் ஒழுகுதல் போன்ற பிரச்சினை ஏற்படும்.

இந்நிலை கருக்காலத்தின் தொடக்கத்தில் தோன்றி, முடியும் காலம் வரும் வரை நீடிக்கும். சில வேளைகளில் குழந்தை பிறந்த 12 வாரங்கள் வரை நீடிப்பதுண்டு. கர்ப்ப காலத்தில் 2ஆவது மாதத்தில் சிறு நீர்ப்பை அழற்சியடையும் நேரிடுகிறது. இதேநிலை பிரசவமாகும் காலத்திலும் ஏற்பட்டு அசௌகரியத்தை உண்டாக்கும்.

**சுவாசித்தல்**

கரு வளர்ச்சி அடைந்த நிலையில்- உதரவிதானப் பகுதியின் இயக்கத்தில் இடையூறு ஏற்படுகிறது. இதனால் சுவாசத்தில் சிக்கலும், மூச்சிரைப்பும் அல்லது மூச்சுத்திணறலும் ஏற்படும்.

**எலும்பு மண்டலம்**


முதுகு மற்றும் இடுப்புப் பகுதி எலும்புகளில் அழுத்தம் ஏற்படுவதால், கருத்தரித்த 2ஆவது மாதத்திலேயே கர்ப்பிணிகளுக்கு கால்களில் வலி ஏற்படும்.

இடுப்புக் கூட்டுப்பகுதி மென்மையாகவும், தளர்வாகவும் ஆகத் தொடங்குவதால் உறுதியையும், பலத்தையும் இழக்கிறது. இதனால் முதுகு வலிக்கும். எப்படி உட்காருவது, படுப்பது என்ற நிலைகளை-மருத்துவரை அணுகி தெரிந்து கொண்டு, அதன்படி நடந்தால், இத்தகைய வலிகளைத்தவிர்க்கலாம்.

**கருப்பையின் மாற்றம்**

கருத்தரித்த பின் ஒவ்வொரு வாரமும் கருப்பை வளருவதால், வயிற்றுப் பகுதியில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும். இதனால் வயிறு பல கட்டங்களில் விரிவடையும்குறிப்பிட்ட அளவு வரை விரிவடையா விட்டால், கரு சரியாக வளரவில்லை என்பதை உணர்ந்து கொள்ளலாம். அப்போது மருத்துவ பரிசோதனை செய்வது அவசியம்.

# புலம் பெயர்ந்த வாழ்வில் கணவன் - மனைவி!



புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களில் கணவன் - மனைவி எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினையில், சில குடும்பங்களுக்கிடையே பிணக்குகள் ஏற்படுவதை எத்தனை நாளைக்குத் தான் மூடிமறைக்க முடியும்.

பிரச்சினைக்காக அடிப்படைக் காரணத்தை நாம் ஆராய்வதில் தவறில்லை. அதை விட்டு பூசி மெழுகுவதில் எந்த நன்மையும் வரப் போவதில்லை. பதிலாக ஒரு நாள் அது பூகம்பமாக வெடிக்க, சந்தி சிரிக்க வைத்து விடுமல்லவா!

ஆகையால், இதற்கான அடிப் படைக் காரணங்களை ஆராய்ந்து, உள் ரகசியங்களைத் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?

**மன அழுத்த நிலை**

தம்பதியினரின் பொருளாதார சமூக எதிர்பார்ப்புப் பிரச்சினைகள் காரணமாக மன ஒற்றுமையின்மை.

**தன்னம்பிக்கை குறைந்திருத்தல்**

புலம்பெயர்ந்து வாழும் தம்பதிகளில் அநேகருக்கு முதல் இரண்டு காரணங்களும் இப்போது பொதுவாகவே காணப்படுகின்றன. வேலை நேர அதிகரிப்பு (இரவு பகல் என்று மாறி மாறி வேலை) ஆடம்பரச் செலவுகளைச் சந்திக்கும் அளவுக்கு குடும்பத்தில் வருமானம் போதாமை போன்றவை முக்கிய காரணங்களாகின்றன.

சுமை தலைக்கு மேல் பாரமாகிவிட, இல்லற வாழ்க்கையில் மனம் ஈடுபட மறுக்கிறது. மனம் தான் நம்மை ஆட்டுவிக்கும் கருவி. மனம் களைத்து, சோர்வடையும் போது இவற்றைப் பற்றி எப்படி யோசிக்க முடியும்?

உழைத்துப் பணம் சம்பாதித்துக் கொண்டு- வீட்டுக் கடன், சகோதரங்கள், மச்சான், மச்சாள்மாரைக் கூப்பிட்ட கடன் போன்றவற்றை யோசித்து, என்ன செய்வது என்று திணறும் புலம் பெயர்ந்த வாழ்வில் - ஒரு ஆண் மகன் இத்தனை சங்கடங்களுக்கு மத்தியில் மனைவியைத் திருப்திப்படுத்துவது சிரமமான விடயமே. இந்த நெருக்கடிக்கு மத்தியில் மனைவியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாதவனாகத் திண்டாடுகிறான்.

மனப் பிரச்சினையால் பாதிப்படை



ந்த கணவனை - சுடும் வார்த்தைகளால் விமர்சிக்கக்கூடாது. பக்கத்துவீட்டுக் குடும்பத்தில், கணவன் - மனைவியை எவ்வளவு சந்தோசமாக வைத்திருக்கிறார். எங்கள் தலைவிதி இது என்று தன் கணவனைச் சுட்டெரிக்கும் கண்ணகிகளும் நம் மத்தியில் இல்லாமல் இல்லை.

புலம்பெயர்ந்த நாட்டில் தனது கணவன் இரவு, பகலாய் வேலை செய்து, தன்னையும் பிள்ளைகளையும் வாழ வைக்கிறான் என்ற உண்மையை நினைத்துப் பார்க்க அந்தப் பெண் தவறி விடுகிறாள்.

ஒரு சில நிமிட சுகத்துக்காக தன் உயிரான கணவனையே விட்டு விட்டு, குடும்பத்தையே பிரிந்த கதைகளையும் நாம் அடிக்கடி கேள்விப்படாமல் இல்லை.

வேலை, பாதுகாப்பு இன்மை, வேலை இழத்தல், பதவி உயர்வு இன்மை, கிடைத்த வேலையில் நிலைத்து நிற்க மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்தும் பிரயத்தனம் இவை எல்லாம் ஒருவரின் தன்னம்பிக்கையைப் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. தொடரும்...)

# சுனாமி ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

(16 ஆம் அத்தியாயம்)

வேப்பமரக்கிளையில் இருந்து குயில் கூவியது! கூ...! கூ...! எனக்கு அதைக்கேட்டதும் உற்சாகம் பிறந்தது. நானும் பதிலுக்குக் கூவினேன்! கூ...! கூ...! கூ...! குயிலும் உணர்வோடு கூவியது. கூ...! கூ...! கூ...! கூ கூ...! நான் திருப்பிக் கூவ வாயெடுக்க... அம்மா அதட்டினாள்.

''பரிமளம்!... பாவம்! அப்பிடித் திருப்பிக் கூவாதே!'

'ஏனம்மா என்ன பாவம்?... பறவை தானே!...'

'பறவை எண்டாலும் அதுக்கும் உணர்விருக்கடி!'

அம்மா என்ன சொல்கிறாள்? குயிலும் நானும் கூவி விளையாடுகிறோம்! இதிலை என்ன பிழை? நான் திரும்பவும் அம்மா விட்டைக் கேட்க நினைத்தேன்! அதற்கிடையில் மடியில் வேப்பம் பழங்களின் கோதுகள் விழுந்தன!

'ஐயோ!... என்ர வெள்ளைச் சட்டை! பாழாப்போச்சு!'

'நீ செய்த வேலைக்கு அது வஞ்சம் தீர்த்துப் போட்டுது!'

அம்மா சிரித்துக்கொண்டே என் தலையைச் சீப்பால் வாரினாள். நான் ஒன்றும் பேசவில்லை!

'பரிமளா! அந்தக் குயில் தன்ர சோடிக் குயிலைக் கூப்பிடும்போது நீ போலியாக் குரல் குடுத்தா... அதுக்குக் கோவம் வருந்தானே'

'அம்மா! அதின்ர சோடிக்கு இது கூவுறது கேட்குமே?'

'நல்லாக் கேக்கும்!... அங்கைபார் அதின்ர சோடியும் வந்திட்டுது!'

நான் வேப்பங்கிளையை நிமிர்ந்து பார்த்தேன்! இன்னொரு குயில்!... இரண்டும் அருகருகே இருந்து ஏதோ கண்ணால் பேசிக் கொண்டிருந்தன.

'பரிமளா!... பள்ளிக்கூட பஸ் வரப் போகுது! போய்ச் சட்டையை மாத்திக் கொண்டு வா சாப்பிட!...'

நான் எழும்பினேன்! அம்மாவும் சீப்பைத் தலையில் செருகிக்கொண்டு அடுக்களையுள் புகுந்தா! அப்போது வாசலில் ஏதோ சத்தம் கேட்டது! அம்மா வெளியே போய்ப் பார்க்க, நான் சட்டையை மாத்தினேன்! அண்டைக்கும் இப்பிடித்தான். ஆரோ படலையுக்கை வந்து தம்பி! தம்பி! எண்டு கூப்பிட, அம்மா போனாள். வந்தது ஆரென்று தெரியாது. ஆனால் அம்மா திரும்பி வரும்போது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க வந்தாள். நான் அவளை ஒன்றுமே கேட்கவில்லை. இப்ப யார் வந்திருப்பினம்? நான் யோசித்தவாறே வெளியே வர- அம்மா வந்தாள். அவள் முகத்தில் ஒரு அசுமாத்தமும் இல்லை. இப்ப நான் ஒண்டும் கேக்காமல் பேசாமலிருப்பதுதான் நல்லது.

'பரிமளா!... நாளைக்கு இடியப்பம் ஒரு ஓடர் வந்திருக்கு!'

'எவ்வளவு அம்மா!'

'400 இடியப்பமும் கறியும் சொதியும்...!'

'என்ன விசேஷம் அம்மா?'

'ஆற்றையோ செத்தவீட்டுக்குக் காலைப்பலகாரம் கொடுக்கவேணுமாம்!'

'அம்மா எங்கட கோழியள் போட்ட முட்டை கிடக்கல்லே!'

'கிடக்குத்தான்! ஆனால் அரிசிமா போதாது!'

'அம்மா! கோதுமை மாவையும் கலந்து அவிப்பம்!'

'அப்பிடிச் செய்தால் வாறவையள் வாடிக்கையை விட்டு விடுவினம்!'

அம்மாவின் வியாபார மூளை எனக்கில்லை. எங்கட வீட்டு இடியப்பம் தனி அரிசிமாவில அவிப்பதால் தானே எல்லாரும் வந்து வேண்டிக் கொண்டு போறவை!...

'பரிமளா!... இண்டைக்கு பள்ளிக்கூடம் போகாமல் நீ நிண்டால் கொஞ்சம் உதவியாக இருக்கும்!...

'சரியம்மா!...'

நான் சொல்லிவிட்டு உள்ளே போய்ச் சட்டையைக் கழற்றினேன். அம்மா பச்சையரிசியை ஊறப்போட்டு விட்டு. கோழி அடைக்கும் கரப்பைத் திறந்து பார்த்தாள். நானும் வந்து எட்டிப் பார்த்தேன். அதற்குள் முட்டை இல்லை. கோழி அடைகிடக்குது. அம்மாவின் முகத்தில் ஏமாற்றம்.

'பரிமளா இப்ப என்ன செய்யிறது? இதுகள் இந்தநேரம் அடை கிடக்குதுகள்!'

'அம்மா! கமலம்மாவிட்ட கடனாக வேண்டிப்போட்டு பிறகு குடுப்பம்!'

'சரி நீ போய் கமலம்மாவிட்ட 5 கோழி முட்டை வாங்கிக் கொண்டு வா!'

அம்மா சொல்லிவிட்டு, தென்னை மரத்தடியில் கிடந்த இரண்டு தேங்காய்களையும் எடுத்து, மண்வெட்டியில் உரிக்கத் தொடங்க, நான் வேலிப் பொட்டுக்காலை கமலம்மா வீட்டபோனன்! அங்கை ஆரோ அவவோட கதைச்சுக்கொண்டிருந்தினம்!



கமலம்மாவோட ஒரு பாதிரியார் கதைச்சுக்கொண்டிருந்தார். நான் உள்ளே போகாமல் ஜன்னலடியில் நின்று பார்த்தேன்.

'அம்மா! இஞ்சை அந்தப் பிள்ளையின்ர சொந்தக்காரர் இருக்கினம் எண்டு சொன்னதாலை வந்தனான்!'

'இஞ்சை அப்பிடி ஒருதரும் இல்லை! நீங்கள் வேற இடத்தில போய் விசாரிச்சுப் பாருங்கோ!'

கமலம்மாவின் குரலில் வெறுப்புத் தொனித்தது. பாதிரியார் திரும்பவும் பவ்வியமாகக் கேட்டார்.

'அம்மா! உங்கட காணியுக்கை யாரோ மலையிலிருந்து வந்திருக்கினம்...! அவையிட்ட ஒருக்கா விசாரிச்சுச் சொல்லமுடியுமா!'

'ஐயா இப்ப விடிய வெள்ளென அவையிட்டக் கேக்க ஏலாது! நீங்கள் வேற யாரையும் கேட்டுப் பாருங்கோ!'

'அம்மா!... நான் மாலையில் வருகிறேன்!... நீங்கள் கொஞ்சம் கருணை செய்ய வேண்டும்! கர்த்தர் உங்களைக் காப்பாற்றுவார்!'

பாதிரியார் சொல்லிவிட்டுச் சைக்கிளில் ஏறிப்போய்விட்டார்! கோயிலுக்குப் போக எண்டு...! வெள்ளிக் கிழமை நான் வெளிக்கிட, இந்தப் பாதிரி வேதக்காரன் வந்திட்டான்! கமலம்மா முணுமுணுத்துக்கொண்டு திரும்ப, நான் போய் முன்னாலை நிண்டன். என்னைக் கண்டவுடன் கமலம்மாவின் முகம் மலர்ந்தது.

'என்ன பரிமளா! இண்டைக்குப் பள்ளிக்கூடம் போக இல்லையோ!'

'இல்லை பெரியம்மா! நாளைக்கு ஒரு இடியப்ப ஓடர் வந்திருக்கு! அம்மாவுக்கு உதவி செய்யவேணும்!'

'அது சரி! இப்ப என்னட்ட என்ன விசயமா வந்தனி!'

'அம்மா உங்களிட்ட 5 கோழி முட்டை கடனா வாங்கிவரட்டாம்!'

'இண்டைக்கு வெள்ளிக்கிழமை! நான் முட்டையைத் தொட மாட்டேன். மாட்டுக் கொட்டிலுக்க கரப்புக்க முட்டை கிடக்கு! நீ 5 முட்டையை எடுத்துக்கொண்டு வா! கவனம் உடைஞ்சு போடும்!'

நான் துள்ளிக்கொண்டுபோய் கரப்பைத் திறந்து பார்த்தேன்! ஏழெட்டுச் சிவப்புமுட்டை! பெரிய முட்டை! எனக்குப் பெத்தாவின் ஞாபகம் வந்தது. அவ பொரிக்கும் முட்டைப் பொரியல். சின்ன வெங்காயத்தைப் பொடியாக வெட்டி, நல்லெண்ணெய் விட்டுப் பொரித்து அதற்குள் முட்டை அடித்து, மிளகு சீரகத்தூளும், உப்பும் அளவாகப் போட்டு ஊற்ற அது பொங்கிப் பெரிய வட்டமான அப்பமாக வரும். பொரியல் ஊரெல்லாம் மணக்கும். குழல் புட்டும் முட்டைப் பொரியலும் நானும் அம்மப்பாவும் ரசித்துச் சாப்பிடுவோம்! ஆ!... என்ன ருசி!... நாக்கில் நீர் ஊறியது.

'என்ன பரிமளா யோசனை?'

கமலம்மா வந்துவிட்டா!

'ஒண்டுமில்லை! முட்டை நல்ல சிவப்பா வடிவா இருக்கு! அதுதான் பார்த்துக் கொண்டிருந்தனான்!'

'சரி எடுத்துக்கொண்டு வா! நானும் உன்ர கொம்மாவை ஒருக்கா சந்திக்க வேணும்!'

பதனமாக அவ தந்த மாட்டுத் தாளில் 5 முட்டைகளை எடுத்து வைத்து, பக்குவமாகச் சுற்றிக் கொண்டு வந்தேன்.

'சின்னக்கிளி!... சின்னக்கிளி!'

கமலம்மா அம்மாவைக் கூப்பிட, அம்மா ஈரக்கையை சீலைத்தலைப்பில் துடைச்சுக்கொண்டு வேகமாக வந்தா. நான் முட்டைகளைக் கொண்டு போய் அரிசிப் பானையைத் திறந்து மெதுமவாக ஒவ் வொன்றாக எடுத்து வைத்தேன்! மீண்டும் பெத்தாவின் முட்டைப் பொரியல் நினைவில் மணத்தது. வெளியே முற்றத்தில் கமலம்மாவும், அம்மம்மாவும் ஏதோ இரகசியமா கக் கதைச்சுக்கொண்டிருந்தினம். நான் வரும் அரவம் கேட்க குரல் சற்றுப் பெலத்தது.

'சரி! பிள்ளை...! நான் சந்நிதி கோயிலுக்குப் போட்டுவாறன்! கட்டை மாவை எனக்குத்தா! புட்டுக்கு நல்லா இருக்கும்!'

அம்மா தலையை ஆட்டினாள். முகத்தில் ஏதோ யோசனை பற்றிக்கிடந்தது. கமலம்மா ஏதோ சொல்லியிருக்கவேணும். அம்மா அதை எனக்குச் சொல்லப் போவ தில்லை. மலையில குழப்பமாம் எண்டு செய்தி வந்தநாளிலிருந்து இருவரும் குசுகுசுவெண்டு ஏதோ கதைக்கினம்! அம்மாவும் சரியாக் கவலைப்படுறாள்! ஒரு வேளை அப்பாவை நினைச்சுக் கவலைப்படுகிறாளோ! நான் வேலிக்கருகே சென்று பரந்துகிடந்த கடலைப் பார்த்தேன்!... என் மனம் சங்கடப்பட்டது. (தொடரும்...)

# குழந்தைக்காக...

(சென்றவாரத்தொடர்ச்சி...)

**தொடுகை**

அன்னை கட்டி முத்தமிட்டால், மலரா குழந்தைகள் இருக்குமோ?

தொடுகை உணர்ச்சிகள் தொட்டுத் தூக்கிவிடக்கூடியது. தொடுகையின் மூலம் உணர்த்தக்கூடிய விடயங்கள் அநேகம். தொட்டுத் தூக்கும்போது, அன்பை உணர்த்துகிறோம். அடிக்கும் போது கோபத்தை வெளிப்படுத்துகிறோம்.

மண், தண்ணீர் போன்றவற்றில் கைகளை அளைந்து விளையாடுவது போன்றவற்றைத் தடுக்காதீர்கள். இயற்கையுடன் ஈடுபட்டு, குழந்தைகள் விளையாடுவது அவசியமாகும்.



இதேபோன்று மென்மையான பொம்மைகள் குழந்தைகளுக்கு விருப்பமானவை. கட்டாயம் குழந்தை களுக்கு பொம்மைகளை வாங்கிக் கொடுங்கள். உணர்ச்சிகளின் வடிவங்களில் குழந்தைகளின் கற்பனைச் சக்திவளரும் .

வண்ண வண்ணப். பொருட்கள், வேறு வடிவங்களிலான பொருட்கள் குழந்தைகளை இலகுவில் கவர்ந்து விடுகின்றன.

கலர்பென்சில், பெயின்ரிங்ஸ்ரிக் போன்றவை குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமானவை. கையில் கொடுத்தால், தங்கள் கற்பனை வளத்தை, வீட்டுச் சுவர்களை யெல்லாம் வெளிப்படுத்திவிடும். பச்சை நிறக் காகம், மஞ்சள்நிறமரம், நீலநிறச் சூரியன், சிவப்புநிற ஆறு எனத் தங்கள் கற்பனையில் வரைவார்.

# தமிழீழ தேசிய தலைவரின் மதிநுட்பமே பாரிய வெற்றிகளுக்கு வழி சமைத்தது

## மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி



முல்லைத்தீவு

கைத்துப்பாக்கியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த விடுதலைப் போராட்டம் - காலப்போக்கில் கெரில்லா அணியாக வளர்ச்சி பெற்று இன்று முழுப்பலம் கொண்ட இராணுவமாக வளர்ச்சி கண்டுள்ளது என, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

முல்லைத்தீவு - உடையார் கட்டுப் பிரதேச மாவீரர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

நாங்கள் நீண்ட ஒரு சமாதானத்தின் இறுதி நாட்களை உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்த நீண்ட சமாதானத்தைச் சுமக்க, ஒரு நீண்ட யுத்தத்தை எதிர்கொண்டோம்.

அந்த நீண்ட யுத்தத்தில் எங்களுடைய போராளிகளின் தியாகமும், அர்ப்பணிப்பும் எங்களுடைய தேசியத் தலைவரின் மதிநுட்பமான வழி நடத்தலும், மக்களின் பலமும் தான் பாரிய வெற்றிகளை நாங்கள் பெறுவதற்கு வழிசமைத்துக் கொடுத்திருந்தது.

அந்த வெற்றிதான் இந்தச் சமாதானச் சூழலுக்கு இட்டு வந்தது. இந்தச் சமாதானம் பற்றி நாம் பார்ப்போமானால், சமாதானத்துக்கு முன்னர் எமது விடுதலைப் போராட்ட வரலாற்றைப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது.

நாங்கள் இதற்கு முன்னர் பல தடவைகள் சமாதானச் சூழல்களைக் கடந்து வந்துள்ளோம். ஆனால் இந்தச் சமாதானச் சூழல் வித்தியாசமாக இருந்தது. ஏனெனில் அப்போது எமது இனம் ஒரு பலமான இனமாக இருக்கவில்லை. எங்களுடைய மூத்த அரசியல் தலைவர்கள் போராடி உண்ணாவிரதமிருந்து, ஊர்வலங்கள் நடத்தி, கறுப்புக்கொடி காட்டி பல்வேறுபட்ட வழிகளில் அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். அந்த அகிம்சைப் போராட்டங்கள் எதுவும் பயனளிக்காது போய்விட்ட நிலையில்தான், எங்களுடைய விடுதலைப் போராட்டம் ஆயுத போராட்ட வடிவம் பெற்றது.

இந்த ஆயுதப் போராட்ட வடிவத்தைப் பெற்று இன்று 33 வருடங்கள் கடந்துள்ளன. இந்த 33 வருடங்களில் விடுதலை இயக்கம் ஒரு பெருவளர்ச்சியை கண்டிருக்கிறது.

கைத்துப்பாக்கியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த விடுதலைப் போராட்டம் - கெரில்லா அணியாக காலப்போக்கில் வளர்சி பெற்று, இன்று 33 ஆண்டு காலத்தில் ஒரு முழுப் பலம் பொருந்திய இராணுவமாக வளர்ச்சி கண்டுள்ளது. இன்று சிறு சிறு தாக்குதல்களை நடத்தி வந்த எமது இயக்கம், எதிரி வருடக் கணக்காக, பல கோடிக் கணக்குப் பெறுமதியான பணத்தைச் செலவு செய்து, சர்வதேச நாடுகளில் இராணுவ பலத்துடன் கைப்பற்றிய பாரிய நிலப் பரப்புகளை மிகக் குறுகிய காலத்தில் வெற்றி கொண்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு-உடையார் கட்டுப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வும், வீரமுரசு நிகழ்வும் உடையார் கட்டுப் பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் சிறப்புரையை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார்.

தொடர்ந்து பாரதி சிறுவர் இல்ல மாணவர்களின் கலை நிகழ்வும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் - பேபி ஆசிரியை நெறியாள்கையிலான சங்கநாதம் நிகழ்வும் இடம்பெற்றது.

# தகவல் தொழிற் பயிற்சி நிலையத்தின் கணினிக் கற்கைநெறி ஆரம்பம்

கிளிநொச்சி

கிளிநொச்சி ஜெயந்திநகர் சமுதாய முன்னேற்ற நிலையத்தின் கீழ் இயங்கும், தகவல் தொழில் பயிற்சி நிலையத்தின் 4 ஆவது அணியினருக்கான கணினிக் கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சமுதாய முன்னேற்ற நிறுவன உதவிப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை மாவீரர் போராளி குடும்பநலன் காப்பகத் துணைப் பொறுப்பாளர் பரஞ்சோதி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் பூங்குன்றன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஈகச்சுடரை அன்புச் சோலைப் பணிப்பாளர் விக்கி, சமுதாய முன்னேற்ற நிலையத்தின் செயலாளர் கணேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் பூங்குன்றன், கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சீலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த அணியில் 40மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு 6 மாதங்கள் அடிப்படைக் கற்கைநெறியும், 3 மாதங்களுக்கு ஆங்கிலக் கற்கை நெறியும் வழங்கப்படவுள்ளன.

# வவுனியாவில் குளங்களை அண்டிய பிரதேசங்களில் குடியேற்றங்கள்!

வவுனியா

வவுனியாமாவட்டத்தில்காணப்படும் பெரும்பாலான குளங்களை அண்டிய பிரதேசங்களில், குடியேற்றம்என்றபெயரில்பொதுக் காணிகள் ஏக்கர் கணக்காக ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இதில் அரச அதிகாரிகள் பலர் சம்பந்தப்பட்டு இருப்பதன் காரணமாக, உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் இருப்பதாகப் பொது அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இந்த நிலை தொடருமானால், இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பிரதேசத்தில் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் எனவும், இனியாவது அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

# பண்டார வன்னியன் நினைவாக கவிதை, கட்டுரை, ஓவியப்போட்டி!

கிளிநொச்சி

வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியன் 202 ஆவது நிறைவு நினைவு நாளையொட்டி கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகள் என்பன இடம்பெற்றன.

இந்தப் போட்டிக்கான கவிதை, கட்டுரைகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். ஓவியப் போட்டிப் பிரதிகள் யாவும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் யாவும் திறந்த போட்டிகளாக நடைபெறும். இதில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் பங்குபற்ற முடியும்.

இந்தப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழும், பெறுமதியான பரிசில்களும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி கற்சிலைமடுவில் நடைபெறவுள்ள விழாவில் வழங்கிக் கௌரவிக்கப்படும் என விழாக் குழுவினர் தெரிவித்தனர்.

# சான்றிதழ் வழங்கல்

கிளிநொச்சி

பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஆதரவுடன் பெண்கள் தொழிற் பயிற்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட, பயிற்சிநெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு- இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரெலோ உறுப்பினர் வீட்டின் மீது தாக்குதல்!

வவுனியா

வவுனியா தேக்கவத்தை தோணிக்கல் பிரதேசத்தில், ரெலோ உறுப்பினர் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை 2.35 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலில் எவரும் காயமடையவில்லை. எனினும் வீட்டுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டது யார் என இதுவரை கண்டறியப்படவில்லை.

வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தம்பிளிகுமார் என்ற முன்னாள் ரெலோ உறுப்பினரின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

# இராணுவத்தினரின் மண் அணைகளால் சிரமங்களை எதிர்நோக்கும் விவசாயிகள்

வவுனியா

வவுனியா - குளவிசுட்டான் கிராமத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள மண் அணைகள் மற்றும் காவலரண்களால் இந்தப் பகுதி விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைமூலம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த இந்தப் பிரதேசத்தில், பெருமளவான விவசாய நிலங்களில் காவலரண்கள், தொடர் அணைகள் போன்றவற்றைப் படையினர் அமைத்திருந்தமையால் பெருமளவான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தப் பிரதேசத்தில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# கற்பித்தல் உபகரண கண்காட்சி

கிளிநொச்சி

கிளிநொச்சி கனகபுரம் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சி நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கரைச்சிக் கோட்டக் கல்வி அலுவலர் திருமதி. இ. அரியரத்தினமும், சிறப்பு விருந்தினராக கௌரி சந்திரசேகரமும் கலந்து கொண்டனர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூலை - 22

1802 : கலங்களே உடலின் அடிப்படைக் கட்டுமானப் பொருள் என்று முதன் முதலாகக் கூறிய பிரான்ஸைச் சேர்ந்த மருத்துவரான மேரி பிராங்காயிஸ் சேவியர் மரணமடைந்தார்.

1832 : நெப்போலியனது மகன் இரண்டாம் நெப்போலியன் பிறந்தவுடனேயே ரோமின் மன்னராக நியமிக்கப்பட்டார்.

1901 : தொழிற்சங்க அங்கத்தவர்களது செயல்களுக்காக தொழிற் சங்கத்தின் மீது வழக்குத் தொடர முடியும் என்ற புகழ்பெற்ற தீர்ப்பை பிரித்தானிய பிரபுக்கள் சபை வழங்கியது.

1917 : ஜேர்மனிக்கு விசுவாசமாக சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து, கடந்த 2 ஆம் திகதி பதவி விலகிய போலந்து பிரதமர் பில்கட்ஸ்கி போலந்துப் படைகளால் கைது செய்யப்பட்டார்.

◆ : ஜேர்மனி மீதும், ஒஸ்ரியா மீதும் தாய்லாந்து போர்ப் பிரகடனம் செய்தது.

1919 : ஹங்கேரி - ருமேனியா மீது தாக்குதலை ஆரம்பித்தது.

1932 : அமெரிக்காவில் முதன் முதல் வானொலி ஒலிபரப்பை ஆரம்பித்த மின் பொறியியலாளரும், இயற்பியலாளருமான ரெஜினோல்ட் ஆர்பரி ஃபெஸ்ஸென்ட் மரணமானார்.

1933 : விமானத்தில் தனியாக உலகைச் சுற்றிவரப் புறப்பட்ட வைலிமோஸ்ட் என்பவர் ஏழு நாள், 18 மணித்தியாலம், நாற்பத்தொன்பதரை நிமிடங்களில் தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்.

1947 : இந்திய அரசியல் நிர்ணயச் சபை, இந்தியாவின் தற்போதைய தேசியக் கொடியான மூவர்ணக் கொடியை, சுதந்திர இந்தியத் தேசியக் கொடியாகத் தேர்ந்தெடுத்தது.

1968: இந்தியாவின் முதலாவது பெண் மருத்துவரான முத்துலட் சுமிரெட்டி காலமானார்.

1972 : ரஷ்யாவால் மார்ச் மாதம் 27ஆம் திகதி ஏவப்பட்ட வெனீரா - 8 என்ற விண்கலம் வெள்ளிக்கிரகத்தில் வெற்றிரமாகஇறங்கியது. அங்கு ஒளி அளவு பூமியை விடக் குறைவு என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

1974: துருக்கியும், சைப்பிரஸும் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு காரணமாகப் போர் நிறுத்தம் செய்யச் சம்மதித்தன.

1977 : ஜே.ஆர்.ஜெயவர்த்தன இலங்கையின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

◆ : வளைகுடாவில் குவைத் எண்ணெய்க் கப்பல்களுக்குப் பாதுகாப்பாக அமெரிக்கப் போர்க் கப்பல்கள் செல்ல ஆரம்பித்தன.

1988 : இந்தியா இன்சாட் - சி என்ற செயற்கைக் கோளை பிரான்ஸ் நாட்டின் கயானாவில் கூரு ஏவுதளத்திலிருந்து ஏரியன் - 2 என்ற ஏவுகணை மூலமாகச் செலுத்தியது.

◆ : போலந்தின் தேசிய விடுதலை தினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்
திருக்குறள்

# நமது நோக்கு

## நேர்மையற்ற அரசுடன் பேசுதல் அர்த்தமற்ற விடயமேயாகும்

புரிந்துணர்வு என்பது பரஸ்பரம். பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் சமநிலையில் மனப்பூர்வமாக சகல விடயங்களையும், எந்தவிதமான உள்நோக்கமுமின்றி - ஆத்மார்த்தமாக பேசித்தீர்த்துக்கொள்ளும் மனப்பக்குவம் கொண்டவர்களாக இருந்தால் மட்டுமே சாத்தியமாகக்கூடிய விடயமாகும்.

உடன்பாடுகளும், அவற்றுக்கான விதிமுறைகளும் அடங்கிய ஆவணப்படிவங்களில் கையெழுத்திடுவதன் மூலமும் - அந்த ஆவணங்களைப் பரிமாறிக் கொண்டு கைகுலுக்கிப் புன்னகைப்பதன் மூலம் மட்டும் புரிந்துணர்வை ஏற்படுத்தி விடலாம் என்பது அர்த்தமற்ற விடயமேயாகும்.

அதுவும், நீண்ட நெடுங்காலமாக போர் ஒன்றில் ஈடுபட்டு- ஆக்ரோசமான மோதலை மேற்கொண்டு, இழப்புக்கள், அழிவுகள் மற்றும் அவலங்களைச் சந்தித்து - பரஸ்பரம் விரோத உணர்வுகளை வளர்த்துக் கொண்ட இரு இனத்தவரிடையே ஆழமான - தீர்க்கமான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் புரிந்துணர்வை, திடீரென மேற்கொள்ளும் ஒரு உடன்பாட்டின் மூலம் ஏற்படுத்திவிடலாமென எவரும் நம்புதல் சாத்தியமுமில்லை.

மேலும், ஆக்கிரமிப்பு வெறியுடனும், மேலாதிக்க சிந்தனையுடனும், சிறுபான்மை சமூகத்தவரை உரிமைகளற்றவர்களாக்கி - அடக்கி ஒடுக்கும் திட்டத்துடன், ஒரு நாட்டின் ஆட்சியை நெறிப்படுத்தும் பேரினவாத சமூகத்தின் அரசியல் தலைமைத்துவத்துடன் - அவர்களின் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறவும், தமது சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்து, தமது இனத்தனித்துவத்தைப் பேணப் போராடும் சிறுபான்மை இனத்தின் தலைமைத்துவம் புரிந்துணர்வொன்றை எட்டுவதென்பது மிக மிகக் கடினமான விடயமேயாகும்.

நிர்ப்பந்தங்களின் கீழ் ஓர் ஒப்பந்தம் மேற்கொள்வதன் மூலம், அல்லது உடன்படிக்கையில் கையெழுத்திடுவதன் மூலம் மட்டும் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவுகாணும் முயற்சிகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி விடலாமென நம்புபவர்கள் ஒருபோதுமே பிரச்சினைகளின் மூல ஆழங்களைத் துல்லியமாக ஆராய்ந்து கொள்வதுமில்லை.

- அமைதிமுயற்சிகள், ஒருபோதும் ஒருகை ஓசையாக இருக்க முடியாது.

- சமாதானம் என்பதை அரசியல் நாடகத்தின் ஒரு அங்கமாகவும் கருதிவிடவும் முடியாது. அரசியல் சுமுக நிலைக்கான அச்சாணியாக அது இருந்தால் மட்டுமே - ஒரு நாட்டில் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் மக்கள் வாழமுடியும் என்பதை விளக்கவேண்டிய அவசியமுமில்லை.

தறபோது இலங்கையின் அரசியல் யதாரத்தத்தைப் புரிந்து கொள்வதற்கு இவ்வளவு விடயங்களையும் தெரிந்து கொள்ளல் அவசியமாகின்றது.

மனித உரிமைகளை, மத - இன - மொழி - அடிப்படையில் ஒரு சாராருக்கு நிராகரித்து அவர்கள்மீது மேலாதிக்கம் செய்ய நினைக்கும் வலுவான மற்றொருசாரார் தலைமுறை தலைமுறையாக இரத்தத்துடன் ஊறிபோன தமது இனவெறிச் சிந்தனைகளின் அடிப்படையிலான செயற்பாடுகளில் இருந்து ஒரு ஒப்பந்தம் அல்லது உடன்பாட்டின் மூலம் தம்மை விடு வித்துக்கொண்டு விடுவார்கள் என நம்புவது விவேகிகளால் முடியாத காரியம்.

வடக்கு - கிழக்கில் இன்று எழுந்துள்ள குழப்பகரமான நெருக்கடிச் சூழலின் அபாயகரமான வேகத்தைத் தணிக்க அரசும், புலிகளும் நேரில் சந்தித்துப் பேசவேண்டுமென நோர்வே அனுசரணையாளர்கள் விரும்புவதற்கு - அமைதி முயற்சிகள் சிதைந்துபோகக்கூடாது, சமாதான முயற்சிகளுக்கு ஆபத்து நேர்ந்துவிடக்கூடாது என்ற அவர்களின் நன்நோக்கம் காரணமாக இருக்கலாம்.... அது நியாயமான ஒன்றாகவும் இருக்கலாம்...

ஆனால், மூன்றரை ஆண்டுகளின் முன்னர் மேற்கொண்ட போர்நிறுத்த - புரிந்துணர்வு உடன்பாட்டை முழுமையாகக் கௌரவித்து, அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாது அர்த்தமற்ற காரணங்களைக் கூறி காலம் கடத்தி, தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்களை புறந்தள்ளி தொடர்ந்தும் மேலாதிக்க வெறியுடன் இயங்கிவரும் அரசுடன் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் பேசுவது என்ற கேள்விக்கான பதிலை சர்வதேச சமூகமே வழங்கவேண்டும்.

சமாதான சூழலிலும் - சமாதான விரோத சக்திகளின் ஆதரவுடன் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையைக் காப்பாற்றப் போராடிவரும் அரசால் அல்லது ஜனாதிபதியால் சமாதானப் பேச்சுக்களில் நேர்மையாகச் செயற்படமுடியாது என்பதை அவரது அரசியல் நகர்வுகளின் மூலோபாயங்கள் கடந்த ஒன்றரை வருட காலத்தில் மிகத் தெளிவாகவே உறுதிசெய்துள்ள நிலையில், அவருடன் அல்லது அவரது அதிகாரத்தின் பிடிக்குள் இயங்கும் அரசுடன் எவரது உத்தரவாதத்துடன் பேசமுடியும்?

கிழக்கில் தொடரும் வன்முறைகளின் பின்னணியில் தென்பகுதி அரசியல் கட்சிக்கு ஆதரவான இராணுவத்தினரின் நடவடிக்கைகளே உள்ளதென அறிக்கைவிடும் ஜனாதிபதி செயலகம் - அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

ஏன், விடுதலைப் புலிகளின் பாதுகாப்புக்கும் அரசால் உததரவாதம் வழங்கமுடியாமல் உள்ளது?

இந்தச் சந்தேகங்களுக்கு தெளிவான, தீர்க்கமான பதிலை அரசு தராமல் இன்றைய இறுக்கமான சூழ்நிலைக்குக் காரணமான விடயங்களுக்குத் தீர்வைத் தராமல், பிரச்சினையைச் சிக்கலாக்கி, அரசியல் ஆதாயம் காணமுனையும் அரசுடனோ, ஜனாதிபதியுடனோ பேசுவதில் எந்தவிதமான பலனும் ஏற்படப்போவது கிடையாது.

யுத்தநிறுத்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு நிழல்யுத்தம் ஒன்றைத் தொடர்ந்து மேற்கொள்ளும் பேரினவாதத் தலைமைகள் நெறிப்படுத்தும் ஆட்சியால் சமாதானத்தை எந்த வகையிலும் பாதுகாக்க முடியாதென்ற நம்பிக்கை இறுக்கமாகிவிட்ட நிலையில் - வெறும் சந்திப்புக்களும், பேச்சுக்களும், காலம் கடத்தும் - தமிழர்கள் மீது அழுத்தங்களை அதிகரிக்கும் நிகழ்வுகளாகவே அமையும்.

# நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்பது இங்கு மதிப்பிழந்து போன வார்த்தை!

பேச்சுவார்த்தை என்றசொல்லுக்கு இன்று மதிப்புக் குறைந்துவிட்டது உண்மையில், சொல்லப் போனால் இலங்கையில் பேச்சுவார்த்தை என்ற சொல்லுக்கே மதிப்பில்லாமல் போய்விட்டது என்றுசொல்லியபடியே வந்த மர்ந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன பேச்சுவார்த்தையைப் பற்றிப் பேசிக் கொண்டு வருகிறீர் என்று கேட்டேன்.

பின்ன என்ன? பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்று பேசாதவர்கள் இல்லை, பேசாத நாளும் இல்லை. ஆனால் பேச்சுவார்த்தைகளால் இங்கு ஏதும் பயன் கிட்டியதாகவும் தெரியவில்லை என்று சலிப்புடன் சொன்னார் பரமசிவம்.

எந்தப் பேச்சுவார்த்தையைப் பற்றிச் சொல்லுகிறீர் என்று கேட்டேன்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியுமென்றும், தீர்வு காணப்பட வேண்டுமென்றும் இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு விஷயத்திலும் சொல்லி வந்தார்கள். வாளேந்திய சிங்கக் கொடியை இலங்கையின் தேசியக் கொடியாக, டி.எஸ்.சேனநாயக்காவைப் பிரதமமந்திரியாகக் கொண்ட முதலாவது அமைச்சரவை தீர்மானித்தது. இதற்குத் தமிழ் மக்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். இதைச் சிங்கள அரசு ஏற்கமறுத்தது. சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாகத் தமிழ் மக்கள் ஏற்கவில்லையென்பதை நிரூபிக்க, வவுனியா நாடாளுமன்றப் பிரதிநிதி செல்லப்பா சுந்தரலிங்கம் தமது பிரதிநிதிப் பதவியை ராஜினாமாச் செய்து இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று தேசியக் கொடிக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதற்குப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென்று சொன்னார்கள். பின்னர் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு சிங்கக் கொடியின் தொடக்க ஓரத்தில் பச்சை சிவப்புக் கோடுகள் அமைத்துப் பிரச்சினைக்குத்தீர்வு காணப்பட்டது. வாளேந்திய சிங்கம் சிறுபான்மைச் சமூகத்தினரான தமிழ் முஸ்லிம் மக்களைக் குறிக்கும் பச்சை சிவப்புக் கோடுகளை நோக்கியபடி நிற்பதால்தான் இனப்பிரச்சினை இன்னமும் தீராமல், சிங்கம் என்ற சிங்களவர் வாளேந்தித் தமிழ் முஸ்லிம் மக்களை மிரட்டிக் கொண்டு நிற்பதாகக் கருதப்படுகிறது. இதேபோல் இலங்கை சுதந்திரமடைந்த முதலாண்டிலேயே இலங்கையில் மலையகத்தில் வாழும் இந்தியவம்சாவழி மக்களுக்கு குடியுரிமை வாக்குரிமை மறுக்கப்பட்டது. அப்பொழுதும் பேச்சுவார்த்தை மூலம் இதற்குத் தீர்வு காணலாமென்று சொன்னார்கள். மலையகத்தமிழ்த் தலைவர்கள் சாத்வீகப் போராட்டம் நடத்திச் சிறைசென்றும் தீர்க்கப்படவில்லை.

இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியே நாடற்றவர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்டபோதும், கொண்டு வரப்பட்ட பின்னரும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென்றார்கள் என்று பரமசிவம் சொல்லிக் கொண்டு போனார்.

நான் இடை மறித்து சிங்களம் மட்டும் சட்டம் வந்த பின் அதைக் கொண்டு வந்த பிரதமர் பண்டார நாயக்காவுடன் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லையா? என்று கேட்டேன்.

பேச்சுவார்த்தை நடந்தது தான். தமிழர் தலைவர்கள் எப்போதும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அமைதித் தீர்வு காண்பதற்கும் தயாராகவே இருந்தும் வந்திருக்கிறார்கள். இருந்தும் வருகிறார்கள்! பண்டார நாயக்காவும் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினார். நிம்மதியாக ஆட்சி நடத்துவதற்கும் பேச்சுவார்த்தையில் ஒரு நல்ல முடிவு காணலாமென அவரும் விரும்பினார். இரவு பகலாகப் பேச்சு நடந்து முடிவில் ஒரு ஒப்பந்தமும் கையெழுத்தானது. எப்போதும் நல்ல முடிவு கிடைப்பதை எதிர்த்து அரசியல் இலாபம் தேடுவதற்குச் சிலர் தயாராக இருப்பார்கள். சிங்கள அரசியல் வாதிகள் சிலர் தமிழ் மக்களுக்கு எந்த உரிமை கிடைப்பதையும் விரும்பமாட்டார்கள். இப்படி எக்காலத்திலும் இருப் பார்கள். பண்டா காலத்திலும் சிங்கள அரசியல் வாதிகள் மட்டுமல்ல இன்று போல் புத்தபிக்குகளும் அன்று இருந்து இன்றைய பிக்குகளுக்கு வழி காட்டி யிருந்தனர். ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புக்கள், உண்ணா விரதங்களின் முடிவில் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட் டது. இதேபோல் டட்லியும் செல்வநாயகமும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண இரகசியமாகப் பேசி ஒப்பந் தம் செய்தனர். இதுவும் அம்பலமாகிக் கிழித்தெறியப் பட்டது.

ஏன் பழைய கதைகளை. இன்று வெளிநாடுகள் மனம் இரங்கி கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுத்த உதவியைப் பகிர்ந்தளிப்பதற்குப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நடந்த பேச்சுவார்த்தைகள் பல இடையூறுகளையும் தடங்கல்களையும் தாண்டி ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதைக் கூட இன்னமும் செயற்படுத்த முடியாமல் தடைக்கு மேல் தடையாக இருக்கிறது. இது மட்டுமல்ல, இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு, ஒரு இடைக்கால தன்னாதிக்க சபை நிறுவுவதற்குக் கூட இடையூறுகள் ஏற்பட்டு இன்னமும் முடிவுகாணாமலிருக்கிறது.

இந்த நிலையில் தான் அரசாங்கமும் புலிகளும் நேரடியாகப் பேச்சு நடத்துவதற்கு சமாதானத்துக்கு அனுசரணையாளர்களாகச் செயற்படும் நோர்வேயினர் முயற்சிசெய்து ஒரு யோசனையை முன்வைத்திருந்தனர் என்று நான் இடை மறித்துச் சொன்னேன்.

பொதுக்கட்டமைப்பையே செயற்படுத்த விடாமல் தடை செய்து கொண்டு, அதே சமயம் நிராயுத பாணிகளான போராளிகள் தமது தாயக பூமியில் சுதந்திரமாக நடமாடமுடியாமல் தாக்குதல்களையும் நடத்திக் கொண்டு, புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பிரசாரமும் செய்துவருகின்றனர். விடுதலைப் புலிகளுடன் நிழல் யுத்தம் நடத்திவரும் அரசுடன் எப்படி நேரடிப் பேச்சில் ஈடுபடமுடியும்? யாரை யார் ஏய்க்காட்டுவது? இந்த நேரடிப் பேச்சு எந்தப் பயனையும் தரமாட்டாது. இதனால் இதைவிடுதலைப்புலிகள் ஏற்கமறுத்து விட்டனர். அரசாங்கமும் படைத்தரப்பும் போருக்கு ஆயத்தம் செய்து கொண்டு புலிகள் மீது பழியைச் சுமத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. இனியும் நேரடிப் பேச்சு என்று சொல்லி ஏமாற்றுவதற்கு இடம் கொடுக்க முடியாது என்று பரமசிவம் சொன்னார்.

சர்வதேச சமூகம் இனியும் இவர்களின் ஏமாற்று வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா? என்று கேட்டேன்.

சர்வதேச சமூகம் ஆட்சி பீடத்திலிருப்பர்களுக்குத் தான் சாதகமாக இருக்க வேண்டுமென்று எழுதாத விதியேதும் இருக்கிறதா? அப்படியானால் அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காகக் குரல் கொடுப்பது யார்? அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைக்குத் தாங்களே முடிவு தேட வேண்டியதுதான் வேறு வழியில்லை. பேச்சுவார்த்தைகள் என்பது வெறும் பம்மாத்து என்று சொல்லிக் கொண்டே பரமசிவம் நடந்தார்.

நேர்காணல்

இரா-வின்

# நாட்டுக்கூத்து மரபுவழிக் கலை மட்டுமன்றி பரம்பரைக் கலையாகவும் விளங்குகின்றது

ஊர்காவற்துறைப் பிரதேசத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள மெலிஞ்சிமுனைக் கிராமம் - தென்மோடி நாட்டுக் கூத்துக்கென பல அண்ணாவிமார்களைக் கொண்டமைந்தது. இந்தக் கிராமத்தில் அண்ணாவி மரபில் கடந்த ஐம்பது வருடங்களாகப் பல்வேறு கோணங்களில் இயங்கி வரும் கலைக் குரிசில் அண்ணாவியார் அந்தோனி - சவரிமுத்து தனது நாட்டுக் கூத்து அனுபவங்களை நாட்டுக் கூத்துக் கலை தொடர்பாக பகிர்ந்து கொண்ட கருத்துகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

ஈழத்தின் மரபு வழிக் கலைவடிவங்களில் முதன்மையான ஒன்றாக நாட்டுக்கூத்துக் கலை காணப்படுகிறது. எமது பாரம்பரிய சொத்தாகவுள்ள இந்தக் கலைவடிவம் - பிரதேச வாரியாக பல்வேறு வடிவங்களில் ஆடப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வடமோடி ,தென்மோடி, சிந்துநடை, வசந்தன் போன்ற கூத்துகள் ஆடப்பட்டன. இப்பொழுதும் ஆடப்படுகின்றன. இந்தக் கூத்து வடிவங்களில் யாழ்ப்பாணக் கரையோரக் கிராமங்கள் தென்மோடி, நாட்டுக் கூத்துக்குத் தனி இடம் பெற்றதாகவே உள்ளன.

நான் எனது தந்தையாரைப் பற்றி சிறிது நினைவு கூர்வது இந்த இடத்தில் பொருத்தமானதாக அமையும்.



நீ.வ. அந்தோனி அண்ணாவியார் - யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் நாட்டுக் கூத்துக் கலையை எழுதி, நெறியாள்கை செய்த பெருமைக்குரியவர்.

பல நாட்டுக் கூத்துகளை முழு இரவும் நடித்து, மக்கள் மத்தியில் மங்காப் புகழ்பெற்றவர். எமது கிராமத்தின் கூத்துக்கலைக்கு அத்திவாரமாக இருந்தவர். 'ஊசேன் பாலத்தை ' என்ற நாட்டுக் கூத்தில் பெப்பேனிய மன்னனாக இரண்டு இரவுகள் தொடர்ந்து நடித்துப் பெயர் பெற்றவர். ஒளி, ஒலி வசதிகள் பூரணமாக இல்லாதபோது, தமது திறன்களின் வெளிப்பாடுகளால் பார்வையாளரைத் தொய்யவிடாது, நாட்டுக் கூத்தை நகர்த்தும் திறன் பெற்றவர்களில் எனது தந்தையாரும் ஒருவர்.

எனது தந்தையுடன் சிறுவயது முதல் பல்வேறு பாத்திரங்களில், நாட்டுக் கூத்துகளில் நடித்துள்ளேன். கால மாற்றங்களுக்கு அமைவாக 'ராஜபாட்' பாத்திரமாகவும், கவர்ச்சி மிகு வில்லனாகவும் நடித்து, பலரது பாராட்டுதல்களையும் பெற்றேன். தந்தையாரின் மறைவுக்குப் பின் - நாட்டுக்கூத்துக்களை எழுதி நெறியாள்கை செய்து நானும் பாத்திர மேற்று நடித்து வருகிறேன். கடந்த காலங்களில் 25 இற்கும் மேற்பட்ட நாட்டுக் கூத்துகளை எழுதி, நெறியாள்கை செய்துள்ளேன். இந்த நாட்டுக் கூத்துகள் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் அந்த ஊர் மக்களின் அழைப்புக்கிணங்கி மேடையேற்றப்பட்டமை தனிச் சிறப்பானது.

நாட்டுக்கூத்துக் கலையானது - இன்று குறிப்பிடும் படியான முன்னேற்றம் காணவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தபோதிலும், சூழலியல் மாற்றங்களின் தாக்கங்களே அதிகமாக உள்ளது. கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற இராணுவ நெருக்கீடுகள் எமது கூத்துக் கலையும், கலைஞர்களும் கலைந்து போக காரணமாக அமைந்துள்ளது.

எமது கிராமம் மட்டுமன்றி, பல கரையோரக் கிராமங்களின் கூத்துக் கலைப் பிரள்வுக்கு, நாட்டின் அசம்பாவிதங்களே காரணமாகும். நாட்டுக்கூத்தில் நாட்டம் கொண்ட பலர்புலம்பெயர்ந்துள்ளனர். வேறு சிலர் தென்பகுதியிலும், வேறு சில இடங்களிலும் குடியேறியுள்ளமையால், எமது பாரம்பரிய சொத்தான கூத்துக் கலையைத் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலையுள்ளது. இங்குள்ள ஒரு சில அனுபவமுள்ள கலைஞர்களையும், புதிதாக இளைஞர்களையும் இணைத்து, தொடர்ந்து நாட்டுக்கூத்துக்கலையை நெறியாள்கை செய்து மேடையேற்றி வருகிறேன்.

முன்னைய காலங்களைப் போல் அல்லாது, இன்று போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும், முழுமையாக நாட்டுக் கூத்துகளை மேடையேற்ற முடியவில்லையே என்றகவலை எனக்கு மட்டுமன்றி, மூத்த அண்ணாவிமார் பலரது மனக்குமுறல்களாக வேயுள்ளது. கரையோரக் கிராமங்களில் அநேகமானவை கிறிஸ்தவ சமய சமூகத்தைச் சார்ந்தவை. எம்மால் மேடையற்றப்படுகின்ற கூத்துகளில் பெரும்பாலானவை கிறிஸ்தவ புனிதர்களது வரலாறுகள், வேதாகம குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டதாக வேயுள்ளன.

வரலாறுகளை திரிபுபடுத்தாமல், கூத்துக் கலையின் நெறி முறைகள், இராக, தாளங்களை மாற்றாது, பாரம்பரியத்தை மீறாது, நேர மாற்றத்தை மட்டும் மாற்றி, கூத்துக்கலையைப் பேணி வருகிறேன். இனி வரும் காலங்களிலும் அவ்வாறே செய்யவுள்ளேன். கூத்துக்கலை சார்பானவர்களும் கூத்தின் தனித்துவத்தை இழக்காத வகையில் அவற்றைப் பேண வேண்டுமென்பது எனது கருத்து மட்டுமல்ல, என் போன்றவர்களது விருப்பமுமாகும்.

'ஊசேன் பாலத்தை, மதிவீரன், சகோதர விரோதி, தாவீது கோலியாத், செபஸ்தியார், கிறிஸ்தோப்பர், ஞானானந்தன், பிரளயத்தில் கண்டெடுத்த பாலன், பிரதாபன், பிரபாகரன், அலசு, இராஜ குமாரி, மந்திரிகுமாரி, புஸ்பா' இவை நான் நெறியாள்கை செய்துள்ள நாட்டுக்கூத்துகளில் குறிப்பிடும் படியானவை. கடந்த வருடம் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களைக் கொண்டு, தாவீது கோலியாத் நாட்டுக் கூத்தை நெறியாள்கை செய்தேன். மாகாண மட்டத்துக்கு தெரிவாகி, அங்கு இரண்டாம் இடத்தைப் பெற்றமையும் இங்கு நினைவு கூரப்படவேண்டியது.

நாம் பரம்பரையாக நாட்டுக் கூத்துக் கலையை பேணிப் பாதுகாத்து வருகிறோம். புலம் பெயர்ந்து நோர்வே, கனடா ஆகிய இடங்களில் வாழும் எனது புதல்வர்கள் அங்கும் நாட்டுக்கூத்தை மேடையேற்றி வருகின்றனர். நோர்வேயில் 1989 ஆம் ஆண்டு புலம்பெயர்ந்த நாட்டில் முதல் நாட்டுக்கூத்தென சவரிமுத்து - யோன் பீற்றரினால் தாவீது கோலியாத் நாட்டுக் கூத்து மேடையேற்றப் பெற்றது. இதே போன்று கனடாவில் சிறுமை என்ற நாட்டுக்கூத்தை சவரிமுத்து - மைக்கல் தாசன் நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார்.

ஜெயராசா, மகேந்திரன் இவர்களது புதல்வர்கள் என எனது பேரப்பிள்ளைகள் கூட, புலம்பெயர்ந்த நாடுகளில் ஏமது கலை, கலாசாரத்தை பேணும் நோக்கில் காலத்துக்குக் காலம் நாட்டுக்கூத்துகளை நெறியாள்கை செய்து, தாமும் பங்கு கொண்டு சிறப்பித்து வருகின்றனர்.

கலைஞர்களைப் பொறுத்தவரையில் - அநேகர் மறைந்த பின்னரே கௌரவிக்கப்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும் . கலைஞர்கள் வாழும்போதே கௌரவிக்கும் போது, அவர்களின் பணிக்கான பரிசு அவர்களிடமே கிடைக்கிறது. பொதுவாக கிராமப் புற கலைஞர்களை கலைக் கழகங்களோ, கலாசார அமைப்புகளோ, அரசாங்கமோ கண்டு கொள்வதில்லை. நாங்களே போய் எங்களுக்குப் பட்டம்தாருங்கள், மகுடம் சூட்டுங்கள் எனக் கேட்பது எந்த வகையில் நியாயமானது. எனது கலைச் சேவையை எம் கிராமம் மட்டுமன்றி, கலைத்துறை சார்பானவர்கள் யாவரும் அறிவர் என்பது மறைக்க முடியாத உண்மையாகவுள்ளது.

எமக்கென உள்ள ஒரே ஒரு கலை வடிவம் நாட்டுக்கூத்து ஒன்றுதான். நாட்டுக் கூத்துகளை மேடையேற்றும் தன்மை - அண்மைக்காலங்களில் மிகக் குறைவாக வேயுள்ளது. இதற்கு இன்றைய நவீன இலத்திரனியல் ஊடகங்களின் மோகமும், அவற்றின் அதிகரித்த பாவனையும் காரணமாகலாம். இன்றைய இளம் சமூகம் நாட்டுக்கூத்தை மதிப்பதாகவோ, அவற்றைப் பயில்வதாகவோ அறிய முடியவில்லை (எல்லோரும் அல்ல)

எமது கலைவடிவங்கள் எமது காலத்துடன் நின்றுவிடக் கூடாது. இனிவரும் சந்ததியினருக்கும் எமது கலை வடிவங்கள் கடத்தப்பட வேண்டும். கலைவடிவங்கள் ஆவணமாக்கப்பட வேண்டும். இதற்குப் பொறுப்பானவர்கள் முன்வரவேண்டும். அவர்களது செயற்பாடுகளுக்கு எம் போன்றவர்கள் முழுமையான ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு பல கருத்துகளையும் எம்முடன் பகிர்ந்து கொண்டார் நாட்டுக் கூத்துகலையை பரம்பரையாகப் பேணிப் பாதுகாத்து வரும் கலைக்குயில் அந்தோனி - சவரிமுத்து அண்ணாவியார்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக நாட்டுக் கூத்துக்கலையுடன் தொடர்ந்தியங்குவதுடன், தனது புதல்வர்கள், பேரப்பிள்ளைகளையும் இந்தத் துறையில் இணைத்துச் செயற்படுகின்றமை பாராட்டப்பட வேண்டியது மட்டுமன்றி, இந்தத்துறை சார்பானவர்கள் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியதுமாகும்.

அரசாங்கமோ, ஏனைய அமைப்புகளோ கலைஞர்களை உரிய முறையில் கௌரவிப்பதில்லையென ஆதங்கப்படும் மூத்த கலைஞர், தென்மோடி நாட்டுக்கூத்துத் துறையிலுள்ள முதன்மையான அண்ணாவியர்களில் ஒருவராவார் என்றால், அது மிகையாகாது.

ஐம்பது வருடங்களுக்கு மேல் கலைத் துறைக்கு சேவையாற்றி, தற்பொழுதும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் சவரிமுத்து அண்ணாவியாருக்கு இது வரை கலாபூஷணம் விருது வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டுக் கூத்துத் துறையில் ஒரு பரம்பரை தொடர்ந்தியங்கி வருகிறது. அவர்களுடன் அந்தத் துறை சார்பான கருத்துகளைப் பெற்ற நிறைவில் செவ்வியை நிறைவு செய்தோம்.

---

சிந்திக்கும் வேளையில்...

## கலாசாரத்தைக் காக்கும் சுவரொட்டிகள்

யாழ். குடாநாட்டில் நாளுக்கு நாள் எச்சரிக்கைச் சுவரொட்டிகள் அதிகரித்து வருகின்றன. இதற்கான பிற்புலங்கள், பிற்பலங்கள் திரை மறைவில் இருப்பது ஒரு புறமிருக்க, இது ஏன் ஒட்டப்படுகிறது?.... இதை மீறுவோர்க்கு என்ன கதி ஏற்படும்?... எமது சமூகம் எங்கு சென்றுவிட்டது?.... என்பது பற்றி சிந்திக்க வேண்டிய காலம் தற்போது தலை தூக்கியுள்ளது.

50 ஆண்டுகள் போர் அழிவுகளைத் தாண்டி கல்வி, பொருளாதாரம், சமூகமேம்பாடு எனப்படும் அனைத்து வழிகளாலும் தமிழ் மக்கள் தலைதூக்க முடியாது தத்தளித்துக் கொண்டிருக்கும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளோம். இது எப்படி நியாயமானது? சிங்களப் பேரினவாதம் பல வழிகளாலும் தமிழனை முட்டுக்கட்டை போட்டு, முடக்கி வைத்திருக்கிறது. இதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தருணத்தில் தான் நாம் விழிப்புடன் செயற்பட வேண்டும். ஆனால் நாமோ வாள் வெட்டுக்கள், கோஷ்டி மோதல்கள், கற்பழிப்புக்கள், உணர்ச்சி வேகத்தைத் தூண்டும் நீலப் படங்களைப் பார்ப்பது போன்ற பல செயல்களில் இறங்கியுள்ளோம். எம்மை நாமே அழிப்பது ஒரு புறமிருக்க, எமது சமூகத்தையும் அழித்துக்கொண்டு இருக்கின்றோம். அபிவிருத்தியென்பது எமது சமூகத்துக்கு எட்டாத தொலைவில் நின்று நிழலாடுகிறது.

இதை எப்படி அணுகுவது அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? என்று சிந்தித்து செயற்படும் நிலையில் நாமில்லை. இருக்கின்ற சமூக சக்தியையும் அழிக்கின்ற செயற்பாடுகளைத்தான் நாம் செய் கின்றோம். கல்வி எனும் பொருளுக்கு கருப்பொருளாக இருந்த யாழ்ப்பாணம், இன்று அக்கலைத்துவம் குன்றித் தவிக்கின்றது. இப்படிப்பட்ட எத்தனையோ சோதனைகள் எமக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்க, நாம் இப்படிப்பட்ட சமூகச் சீர்கேட்டுச் செயல்களில் ஈடுபடுவதை யாரும் ஏற்க முடியாது.

இன்று நாம் எமது சுதந்திரத்துக்காக எத்தனையாயிரம் மாவீரர்களைக் கொடுத்து, சர்வதேச அங்கீகாரத்துக்காகக் காத்திருக்கின்றோம். சற்று சிந்தித்துப் பாருங்கள் எதற்காக இவர்கள் உயிர் நீத்தார்கள்?... துள்ளும் இளமை உணர்வுகளையெல்லாம் சுமந்து, சுகபோகத்தை அனுபவிக்க வேண்டிய இவர்கள் அடுத்தவர் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காக சூனியர்கள் வலைக்குள் சுடர்களானார்கள். இப்படி எமது தியாக வரலாறுகளை இன்று உலகமே வியக்கும் நிலையில் இருக்க, நாம் இப்படியாக சமூகத்தைச் சீர்கொடுக்கும் தாண்டவக் கூத்தாட யாரும் இடம் கொடுக்க முடியாது.

ஆகவே கடந்தகால வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கின்ற போது, திருந்துவதற்கு சில சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டும் திருந்தாத தீவிரங்கள் தான் தீராத சோகத்திலாழ்ந்தது. ஆகவே, வன்முறைகளை வரவளைக்காது வருங்காலத்தைத் திட்டமிடுவது சிறந்தது என்ற அடியூற்றிலிருந்து தான் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன என்பது தான் இன்று பலரது ஊகத்தில் உதிக்கும் எதிரொலியாகும்.

வெண் கட்டியன்

எரிபொருள் பற்றாக்குறை எதிரொலி

# விமான சேவைகள் சிலவற்றை இடைநிறுத்தியது சிம்பாப்வே!

சிம்பாப்வேயில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து அந்த நாட்டின் தேசிய விமான சேவை, உள்ளூர் மற்றும் சர்வதேச விமான சேவைகள் சிலவற்றை நிறுத்தியுள்ளதாக சிம்பாப்வே அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் விமானங்களின் உதிரிப்பாகங்களுக்கு ஏற்பட்ட கடுமையான தட்டுப்பாட்டை அடுத்து இரண்டு சிம்பாப்வே விமானங்கள் பறப்பினை மேற்கொள்ள முடியாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டன.

கடந்த ஒரு மாத காலமாகவே சிம்பாப்வேயில் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வந்த நிலையில், கடந்த ஒரு வாரகாலமாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் யாவும் மூடப்பட்டு வெறுமையாக காட்சியளிக்கின்றன.

கடந்த வாரம் அவசரகால பொருளாதார உதவிகளை வழங்குமாறு தென்னாபிரிக்காவிடம், சிம்பாப்வே கோரியிருந்தது.

விமான சேவை நிறுத்தம் தொடர்பாக நேற்றுமுன்தினம் எயா சிம்பாப்வே உறுதிப்பான தகவலைத் தெரிவித்தது. நாம் எமது முழுமையான சேவையை வழங்க முடியாதுள்ளோம். இதற்குக் காரணம் எம்மிடம் போதியளவு எரிபொருள் கையிருப்பில் இல்லை. இதனால் சில விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. மற்றும் சில வழமையாக நடைபெறுகின்றன என விமான சேவைப் பேச்சாளர் டேவிட் எம்வென்கா தெரிவித்தார்.




சிம்பாப்வேயிலிருந்து விக்ரோறியா நீர்வீழ்ச்சி, லண்டன், மற்றும் தென்னாபிரிக்காவிற்கு செல்லும் விமானங்களின் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டதில் அடங்குமென அரச ஊடகமான ''த ஹெரல்ட்'' தெரிவித்துள்ளது.

# சோதிடரின் ஆலோசனையை அடுத்து குழந்தையை அடித்துக்கொன்ற தந்தை

சென்னை—

தமிழகத்தின் கோவை பீளமேடு அருகேயுள்ள உடையாம்பாலம் பகுதியில் வசித்துவரும் ரகுபதி என்ற நபர் தனது 9 மாத குழந்தையை அடித்துக் கொன்றுள்ளார். தனது உயிருக்கு இக் குழந்தையினால் தீங்கு ஏற்படும் என சோதிடர் தெரிவித்ததையடுத்தே மேற்படி நபர் தனது குழந்தையை மிருகத்தனமான முறையில் அடித்துக் கொன்றுள்ளார்.

கணினியில் சோதிடம் பார்க்கும் சோதிடர் ஒருவரை அண்மையில் ரகுபதி சந்தித்து ஆலோசனை கேட்டபோது உனது குழந்தையினால் உனது உயிருக்கு ஆபத்து எனவே, நீ குழந்தையை விட்டுப் பிரிந்திரு என சோதிடர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரகுபதியின் தொழிலில் இழப்பு ஏற்படத் தொடங்கியது. இதற்கும் தனது குழந்தைதான் காரணமென நம்பிய ரகுபதி இது தொடர்பில் அடிக்கடி தனது மனைவியுடன் வாக்குவாதப்பட்டு வந்தார்.

இந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி இரவு மனைவியுடன் வாக்குவாதப்பட்ட ரகுபதி படுக்கையிலிருந்த தனது குழந்தையை மிருகத்தனமான முறையில் தாக்கியுள்ளார். இதனால் மயக்கமடைந்த குழந்தையை அயலவர்களின் துணையுடன் ரகுபதியின் மனைவி மருத்துவமனை ஒன்றில் சேர்த்தபோதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் குழந்தை உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்த பீளமேடு பொலிஸார் ரகுபதியைக் கைதுசெய்துள்ள அதே வேளை சோதிடரையும் தேடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# உதைபந்தாட்ட பயிற்சியாளர் மெக்சிக்கோவில் கடத்தல்



மெக்சிக்கோவிலுள்ள பிரபல உதைபந்தாட்ட கழகமொன்றின் பயிற்சியாளர் இனந்தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் கடத்தப்பட்டுள்ளாரென தகவல்கள் தெரிவித்தன.

ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த பயிற்சியாளரான ஓமர் றொமானோ (வயது 47) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

றொமானோ காரில் சென்றுகொண்டிருந்தவேளை, வேறு இரண்டு கார்களில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள், பயிற்சியாளரின் காரை இடைமறித்த பின்னர், துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு பயிற்சியாளரை தமது காரில் பலவந்தமாக ஏற்றிச் சென்றதாக உள்ளூர் ஊடகமொன்று தெரிவித்தது.

பயிற்சியாளரை யார் கடத்தியதென்ற சிறிய துப்பு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கடத்தலை மிகவும் நன்கு அறியப்பட்ட குழுவொன்றே செய்திருக்க வேண்டுமென பொலிஸ் அதிகாரி ஜோல் ஒரேகா தெரிவித்தார்.

அத்துடன், இவரை விடுதலை செய்வதற்கு, கப்பம் எதுவும் கடத்தல்காரர்கள் கோரவில்லையெனவும் அவர் தெரிவித்தார். ஆனால் இவரை விடுதலை செய்வதற்கு இரண்டு லட்சத்து 70 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ட்களைத் தரவேண்டுமென கோரி கடத்தல்காரர்கள், அங்குள்ள தேவாலயமொன்றுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக உள்ளூர் வானொலியொன்று தெரிவித்தது.

கடத்தப்பட்ட பயிற்சியாளர் பாதுகாப்பான முறையில் திரும்புவதற்கான சகல முயற்சிகளையும் தனது அலுவலகம் மேற்கொண்டு வருவதாக மேயர் அன்ட் றேஸ் மனுவல் லொபேஸ் ஒப்றாடோர் தெரிவித்தார்.

கப்பம் பெறுவதற்காக உலகிலேயே கடத்தலுக்கு பிரசித்தி பெற்ற இடமாக மெக்சிக்கோ விளங்குவதாகவும், 2003 ஆம் ஆண்டு மட்டும், 3000 கடத்தல்கள் மெக்சிக்கோவில் இடம்பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பிரபல உதைபந்தாட்ட கழகத்திற்கு கடத்தப்பட்ட பயிற்சியாளர் கடந்த டிசெம்பர் மாதமே பயிற்சி வழங்குவதற்கான பதவியை ஏற்றுக்கொண்டாரெனவும், இவர் மாதமொன்றுக்கு ஒரு லட்சம் அமெரிக்க டொலரை ஊதியமாகப் பெற்றுவருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## உலக நோக்கு

# சீனாவில் நிலக்கரி சுரங்கத்தில் வெடிவிபத்து 26 தொழிலாளர் பலி

பீஜிங்—

சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 26 சுரங்கத்தொழிலாளர்கள் பலியானதாக சீன அரச செய்தி நிறுவனமான சின்குவா தெரிவித்தது.

இந்தச் சம்பவம் சீனாவின் வடபகுதி மாகாணமான சான்சியில் நேற்று இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தையடுத்து நடத்தப்பட்ட மீட்பு நடவடிக்கைகள் யாவும் முடிவடைந்து சடலங்கள் யாவும், சுரங்கத்திலிருந்து அகற்றப்பட்டதுடன், மூன்று சுரங்கத் தொழிலாளர்களும் உயிருடன் மீட்கப்பட்டதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த வெடிவிபத்து தொடர்பாக விசாரணைகள், ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன், தனியாருக்குச் சொந்தமான இந்தச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தை அடுத்து அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சின்குவா தெரிவித்தது.



சீனாவில் நிலக்கரிச் சுரங்க வெடிவிபத்து ஏற்படுவது வழமையான சம்பவமெனவும், இந்த வருடத்தில் இதுவரை ஆயிரம் சுரங்கத் தொழிலாளர்கள் இந்த விபத்தினால் பலியாகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எரிபொருள் விலை அதிகரிப்பை கண்டித்து ஜெமனில் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம்

சானா—

ஜெமனில் எரிபொருள் விலை அதிகரிப்பைக் கண்டித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் உயிரிழந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விலை அதிகரிப்பைக் கண்டித்து தலைநகர் சானா உட்பட பல நகரங்களில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்று வருவதுடன், அரச அலுவலகங்கள் மீதும், ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதலை நடத்தியதுடன், பொலிஸார் மீதும் கல்வீச்சினை மேற்கொண்டனர்.

வரவு செலவுத்திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறையை சமாளிக்கவும், வரிகள் மூலம் பெறப்படும் வருமானம் குறைவடைந்த காரணத்தாலும், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்ததாலுமே, நாட்டில் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டதாக அரசாங்கம் தெரிவித்தது.



ஆனால், எரிபொருட்களின் விலை அதிகரிப்பு, வறிய நிலையிலுள்ள பொதுமக்களைப் பாதிக்குமெனவும், உடனடியாக அரச அதிகாரிகளின் ஊழல் மோசடிகளை ஒழிக்குமாறும் எதிக்கட்சிகள் அரசாங்கத்தைக் கோரியுள்ளன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் விமான நிலையத்திற்குச் செல்லும் பாதையை தடைசெய்ததுடன், பிரதமர் அப்துல் காதிர் பஜாம்மல்லுக்கெதிராகவும், கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்கு கலகமடக்கும் பொலிஸார் பல்வேறு இடங்களிலும், ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். அத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், படையினருக்குமிடையிலான மோதல்களில் ஏழு விசேட படையினரும் காயமடைந்ததாக தகவல்கள் தெரிவித்தன.



# வன்னியின் இறுதி மன்னன்

## மாவீரன் பண்டாரவன்னியனின் 202 ஆவது நிறைவு - நினைவு வெற்றிவிழாவை சிறப்பிக்கும் கவிதை, கட்டுரை ஓவியப் போட்டிகள்

## 2005-08-25

01. மேற்படி போட்டிகள் யாவும் திறந்த போட்டிகளாக நடைபெறும்.
02. ஆர்வமுள்ளோர் பங்குபற்றலாம்.
03. கவிதை, கட்டுரைப் படைப்புகள் 15.08.2005 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
04. பங்குகொள்ளும் போட்டியாளர்கள் தமது படைப்புப் பிரதியில் சொந்தப் பெயர், முகவரி எழுதாது தனியான தாளில் எழுதி இணைத்து, பாதுகாப்பான உறையில் இட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
05. ஓவியப் போட்டிப் பிரதிகள் யாவும் நேரடியாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
06. முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழும், பெறுமதியான பரிசில்களும் 25.08.2005 அன்று கற்சிலைமடுவில் நடைபெறும் விழா மேடையில் வழங்கிக் கௌரவிக்கப்படும்.
07. தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

**போட்டி நிபந்தனைகள்**

01. கவிதைகள்

தலைப்பு : "வன்னி மன்னவனின் சுதந்திர தாகம்"

கவிதைப் போட்டிகள் மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக் கவிதையாகவோ அமையலாம். ஒவ்வொரு வகையும் தனித்தனிப் போட்டிகளாகக் கணிக்கப்படும். கவிதைகள் புஸ்காப் தாளில் (கோட்டுத் தாள்) 60 - 80 வரிகளுக்குள் அடங்கல் வேண்டும்.

02. கட்டுரை

தலைப்பு : "அன்றைய பண்டார வன்னியனின் வீரவேட்கையும் இன்றைய தமிழ் சமூகத்தின் விடுதலை வேட்கையும்"

ஆக்கங்கள் 800 சொற்களுக்குக் குறையாமலும் 1000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03. ஓவியம்

பின்வரும் எண்ணக் கருக்களை உடையதாக இருத்தல் வேண்டும்.

01. பண்டாரவன்னியன் வாழ்க்கை வரலாறு தமிழர் பாரம்பரியத்தின் ஒரு மைல் கல்.
02. தமிழர் பாரம்பரியத்தில் இரண்டறக் கலந்திருக்கும் தமிழரின் வீரப்பண்பு வெளிக்கொணரப்படல் வேண்டும்.

குறிப்பு : ஓவியம் பிறிஸ்ரல் போட்டில் வரைந்து பொருத்தமான வர்ணம் தீட்டி அனுப்பப்படல் வேண்டும்.

தகவல் : விழாக் குழு,
பிரதேச செயலகம்,
ஒட்டுசுட்டான்.

|1992|

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

*The Leading Daily of Tamils' Homeland*

# சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கடற்தொழிலாளர்களுக்கு 300 மீன்பிடிப் படகுகள் கையளிப்பு!

வடமராட்சி —

வடமராட்சி பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு கியூமெடிக்கா நிறுவனம் இறுதிக்கட்டமாக 300 படகுகளை வழங்கும் நிகழ்வு - நேற்று மாலை 6.00 மணியளவில் சுப்பர்மடம் கட்றதொழிலாளர் சங்க மண்டபத்தில் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாச பொது முகாமையாளர் க.சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பமாக - சுப்பர்மடம் ஆலடிப்பிள்ளையார் கோவில் சந்தியிலிருந்து நிகழ்வுக்கு வருகை தந்திருந்த உயரதிகாரிகள் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மங்கள விளக்கை வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் ஜோன் பொஸ்கோ ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து மாவீரர்களுக்காகவும், சுனாமியால் உயிரிழந்த பொதுமக்களுக்காகவும் 2 நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து ஆசியுரையை இலட்சுமணக் குருக்கள் நிகழ்த்தினார்.

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாச பொது முகா மையாளர் க.சூரியகுமாரின் தலைமையுரையைத் தொடர்ந்து யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சமாச சம்மேளனத் தலைவர் தவரட்ணம், யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி சி.மயிலேறும்பெருமாள், கடற்தொழில் நீரியல்வளத்துறை நிறுவன உயரதிகாரி கனா கெயின்ஸ்மன் சுனாமி அனர்த்த செயலகப் பணிப்பாளர் பாலையா, வடமராட்சி கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பழகன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், கியூமெடிக்கா நிறுவனத்தின் வடபிராந்திய இணைப்பாளர் சாம்ராஜ் சூரியர் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் மேலும் - கியூமெடிக்கா நிறுவன அதிகாரி சூசன்னா மார்க்ஸ், திருமதி சாம் ராஜசூரியர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இறுதியாக ஆயிரமாவது படகை அரச அதிபர் கே.கணேஸ், சாம் ராஜசூரியர், அதிகாரி கனா கெயின்ஸ்மன் ஆகியோர் இணைந்து சம்பிரதாய பூர்வமாக வழங்கினர். (14)

# பிரதியமைச்சரின் வாகனத்திலிருந்தவர்கள் ஐ.தே.க உறுப்பினர் மீது துப்பாக்கிச்சூடு!

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் சேனக தமயந்த சில்வாவின் வாகனத்தை நோக்கி பிரதியமைச்சர் ரோகித அபய வர்த்தனவின் வாகனத்திலிருந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 2.45 மணியளவில் மொரட்டுவ - எகட உயனவில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்துக்கு முறையிடச் சென்றபோது, அங்கு பின்தொடர்ந்த பிரதி அமைச்சரின் அடியாட்கள் தம் மீது தாக்குதல் நடத்தியதாக மேல் மாகாணசபை உறுப்பினர் சேனக தமயந்த சில்வா தெரிவித்தார்.

# யாழ்.செஞ்சிலுவை சங்க தலைவராக பேராசிரியர் கணேசலிங்கம் தெரிவு!

ஆழியவளை —

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் - பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதற்கான தேர்தலும் - யாழ் கிளைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில், புதிய நிர்வாக சபையைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல், தேர்தல் குழுத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் 5 பேர் கொண்ட குழுவின் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் 64 வாக்குகளால் வெற்றி பெற்றுத் தலைவராகத் தெரிவானார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவுக்கு 35 வாக்குகளே கிடைத்தன.

உபதலைவர் பதவிக்கு கு.பாலகிருஷ்ணன் - 78 வாக்குகளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்டார். இவரை எதிர்த்து நின்ற ப.குகவீரசிங்கம் 21 வாக்குகளைப் பெற்றார்.

62 வாக்குளைப் பெற்ற செ.செல்வகுமரன் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி.உதயசூரியனுக்கு 37 வாக்குகள் கிடைத்தன.

பொருளாளர் பதவிக்குப் போட்டியிட்ட சோ.விக்னேஸ்வரன் 67 வாக்குகள் பெற்று வெற்றியீட்டினார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட இ.நாகேஸ்வரன் 32 வாக்குகளைப் பெற்றார்.

இந்தக் கூட்டத்தில் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஆ.தவராசா, இ.மயில்வாகனம், கா.குகபாலன், நா.குகராசா, செ.துரைரட்ணம், திருமதி ஞா.ஆசீர்வாதம் ஆகியோர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர். (122)

# இலங்கையில் எயிட்ஸ் நோய் வேகமாகப் பரவிவருகின்றது!

## யுனிசெப் அதிகாரி அபாய அறிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் எயிட்ஸ் நோய் வேகமாகப் பரவிவருவதாகவும் - முன்னைய ஆண்டுகளை விட, கடந்த ஆண்டில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர் தொகை அதிகமாக இருந்ததாகவும் யுனிசெப்பின் எச்.ஐ.வி. தடுப்புத்திட்ட பொறுப்பதிகாரி டொக்டர் ஹரிஸ் சந்திரயக்கன்டவல தெரிவித்தார்.

கடந்த ஆண்டில்.. காலாண்டுப் பகுதியில் எச்.ஐ.வி. நோய்த் தொற்றுக்குள்ளான 20 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். இதுவே இப்போது 30 -35 ஆக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் எச்.ஐ.வி. தொற்றுக்குட்பட்ட 3500 பேர் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 645 பேருக்கு எச்.ஐ.வி. முதல் நிலையில் இருப்பது உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் இதுவரை எயிட்ஸ் நோயால் 130 பேர் உயிரிழந்துள்ளனர்.

எயிட்ஸ் நோய் விழிபுணர்வை ஏற்படுத்தும் பிரச்சினைகளைத் தீவிரமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அறிமுக நிகழ்வு

கிளிநொச்சி —

தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் அறிமுக விழா கிளிநொச்சியில் நாளை நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் நாளை காலை 10 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# அக்கரைப்பற்று...

பொலிஸ் கொன்ஸ்டபிளான ரஞ்சித் (வயது 26) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமுற்ற விசேட அதிரடிப்படைச் சிப்பாயின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்பட்டபோதும் - அவர் உயிராபத்தை எதிர்நோக்கும் நிலையில் இல்லை என்று விசேட அதிரடிப் படை கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லியூக் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அக்கரைப்பற்றில் படையினர் பரவலாக துப்பாக்கிச்சூடுகளை நடத்தியதுடன், அப்பகுதியில் நடமாடியோர்களையும், வீதியில் வாகனங்களில் சென்றோரையும் தாக்கியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து, அக்கரைப்பற்று நகரில் பதற்றம் ஏற்பட்டதுடன் - கடைகள் மூடப்பட்டு, போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டன. இதனால் வழமைநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

# 2000 பொலிஸார் புதிதாகச் சேர்ப்பு!

கொழும்பு —

கடந்த மூன்று வருட காலத்தில் பொலிஸ் சேவைக்குப் புதிதாக எவரையும் சேர்த்துக்கொள்ளாத காரணத்தால் - தற்போது புதிதாக 2000 பேரைச் சேர்த்துக்கொள்ளவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படும் 2000 பேரும் நாட்டில் பல்வேறு இடங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்படுவர். வடக்கு - கிழக்கு பகுதிகளிலும் பெருமளவு பொலிஸ் நிலையங்களில் பொலிஸாருக்கு வெற்றிடங்கள் நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# 7 சந்தேகநபர்களுக்கும்...

ருக்கே தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

முத்தலிப்பை கொலை செய்வதற்கு விபரங்கள் திரட்டியமை, அவற்றை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியமை, ஆயுதங்கள் மற்றும் வெடி குண்டுகளை தம்வசம் வைத்திருந்தமை என்பவற்றுக்காக முதலாம், இரண்டாம், மூன்றாம் நபர்களுக்கெதிராகவும் , விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையில் அங்கம் வகித்தமை, துப்பாக்கி ரவைகளை வைத்திருந்தமை தொடர்பான குற்றச்சாட்டுகள் நான்காம், ஐந்தாம், ஆறாம் சந்தேக நபர்களுக்கெதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

# லண்டனை...

நேற்றைய குண்டுத்தாக்குதல்கள் மிகவும் சிறியவை எனவும், இதனால் மிகமிகக் குறைந்தளவான சேதங்களே ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் இந்தச் சம்பவங்கள் லண்டனில் பெரும் பரபரப்பையும், பதற்றத்தையும் ஏற்படுத்தின.

சுரங்க ரயில் போக்குவரத்துக்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டதுடன், சில ரயில் நிலையங்கள் முற்றாக மூடப்பட்டன. பல வீதிகள் தடைசெய்யப்பட்டு, பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பெரும்பாலான வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் - இது வெறும் பயமுறுத்தல்களுக்காக நடத்தப்பட்ட தாக்குதல்கள் என்றும், இத்தகைய சம்பவங்களை ஒரேயடியாகக் குறைத்துவிடமுடியாதெனத் தெரிவித்ததுடன், தற்போது நிலைமை முழுமையான கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# 5 ஈழ அகதிகள் மன்னார் திரும்பினர்

மன்னார் —

தமிழ் நாட்டில் மதுரை மாவட்டம் கடல் நகர் அகதி முகாமில் வசித்து வந்த, ஐந்து ஈழ அகதிகள் நேற்றுக் காலை 7 மணியளவில் மன்னார் - தாழ்வுபாடு கடற்கரையை வந்தடைந்தனர்.

இவர்களை நேற்றுப் பிற்பகல் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது, அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# தமிழ்மக்களின்...

நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தது.

எனினும், இந்தப் பேச்சுவார்த்தை இடையில் நிறுத்தப்பட்டது. அதே நேரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தயாரித்துச் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக அதிகாரசபைகூட தொடரமுடியாமல் அது சம்பந்தமாகப் பேசமுடியாமல் அரசு அதைத்தடுத்து விட்டது.

இன்று நீதிமன்றத் தீர்ப்பில் சுனாமி கட்டமைப்பு வெற்று உருவம் போன்று இருக்கின்றது. சர்வதேச சமூகத்தின் பொறுப்பு எப்படியாவது இந்தச் சுனாமிக் கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்வதற்கான அழுத்தத்தை அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தினோம்.

சாதாரண ஒரு சுனாமிக் கட்டமைப்பைக்கூட முன்னெடுப்பதற்கு அவர்கள் தயார் இல்லை என்றால், இவர்களிடமிருந்து தமிழர்கள் எப்படி தம்முடைய பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்த முடியும். என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து பார்க்கவேண்டும்.

இத்தனை காலமும் போராட்டம் தொடர்ந்தபோதும், ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற முடிவுக்கு வந்த போதிலும் -

அதைக்கூடத் தருவதற்கு அரசு மறுக்கும் போது எங்களுடைய கருமங்களை நாங்களே செயலாற்றுவதற்கான ஒரு நிலையைத்தான் நாங்கள் தேடவேண்டி இருக்கும் என்று அவர்களுக்கு வலியுறுத்திக் கூறியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# விசர்நாய்க்...

விசர் நாய்க்கடிகடந்த ஆண்டில் 89 ஆயிரத்து 530 நாய்கள் அழிக்கப்பட்டதாகவும், 89 ஆயிரத்து 530 நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதாகவும் சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரில் மட்டும் 15 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட நாய்களும், 10 ஆயிரம் பதிவுசெய்யப்படாத நாய்களுமாக - மொத்தம் 25 ஆயிரம் நாய்கள் இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

PCS Networks (Pvt) Limited
TRAINING & CONSULTING
325 1/1, KANDY ROAD, CHAVAKACHCHERI.

இலவசகக் கருத்தரங்கு

காலம்: 24.07.2005 10.00 am

Auto CAD 2004 , Archi CAD 7.0 ஆகிய கற்றைநெறிகளை தெனமராட்சியில் முதல் முதலாக அறிமுகப்படுத்தும் நாம் இக்கற்கை நெறி பற்றிய விளக்கங்களை இந்த இலவசக்கருத்தரங்கின் மூலம் வழங்க விருக்கிறோம். ஆர்வமுள்ளவர்கள் எமது நிலையத்தில் 23-07-2005 இற் முன் இவற்றிற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பின்வரும் கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 25.07.2005

1. Engineering Drawing Courses (Computer Aided Design)
- Auto CAD 2004 (50 Hours)
- Archi CAD 7.0 (40Hours)

ஆகிய பாடநெறிகளில் 5 பேர் சேர்ந்து கூட்டாக இணையும் போது மொத்தக் கட்டணத்தில் 1000 ரூபா கழிவு கொடுக்கப்படும்.

அத்துடன் **Diploma in MS- Office** அல்லது **Diploma in Desktop Pulishing** இலவசமாகக் கற்றுக்கொடுக்கப்படும்.

2. Diploma in MS- Office(4 Month) இல் இணைபவர்கள் 25% கட்டணத்தில் (1200/=) உடன் இணைந்து கொள்ளலாம்.

3. Diploma in Desktop Pulishing (4 Month) இல் இணைபவர்கள 25% கட்டணத்தில் **(1500/=)** இணைந்து கொள்ளலாம்.

**இக் குறைந்த கட்டணச்சலுகை 2005-08-07 வரை மட்டுமே மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து நேரில் தொடர்பு கொள்ளவும்.**

✉ PCS, # 325 1/1, Kandy Road, Chavakachcheri.
# 0777179987 (1993)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.